
# நேச மலர்



சங்கரத்தை

வட்டுக்கோட்டை

# சமர்ப்பணம்



பெற்று பெயரிட்டு
பசி உற்ற வேளை
உணவு ஈந்து
பெருவாழ்வு ஈந்த
தாயே எம் அம்மாவே!
உன் நினைவு மலரை
துரட்டிப்பனை முத்துமாரி அம்பாளின்
பாத கமலங்கட்கு சமர்ப்பிக்கின்றோம்.

மக்கள்.

உ

சிவமயம்



சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப்

பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் வரித்துக்கொண்ட

அமரர் முருகேசு திருநாவுக்கரசு

அவர்களின் அருமை மனைவி

## அமரர் நேசமலர் திருநாவுக்கரசு

அவர்கள்

இறைபதம் அடைந்தமை

குறித்த

# நினைவுமலர்

**24.09.2004**

தாரண வருடம் புரட்டாதித் திங்கள்

8 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

அமரர்

# திருமதி. திருநாவுக்கரசு நேசமலர்



தோற்றம்
31-03-1935

மறைவு
25-08-2004

திதி வெண்பா

ஆண்டு தாரணவருடம் ஆன ஆவணிமாசம்
தூண்டு வளர்பிறை தசமிதிதியில்
ஈண்டு புகழ் மிக்க நேசமலர்
இறையடி சேர்ந்த நன்னாள்.

அமரர் திருநாவுக்கரசு நேசமலர்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்காபுரியின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணம் என்னும் நகரம். அதன் மேற்கே நெல் வயல்களும் ஆலயங்களும் சூழ உள்ள கிராமம் சங்கரத்தை.

அறம் வளர்த்த பெரியோர்களையும், சைவசமயி களையும், கற்றோர்களையும், சான்றோர்களையும் தன்னகத்தே கொண்டது. இக் கிராமத்தில் உயர்குடித்தோன்றிய சின்னத்தம்பி விசாலாட்சி தம்பதிகள் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

அவர்களுக்கு, அவர்கள் செய்த நற்தவத்தின் பயனாக நேசமலர் 31.03.1935ம் ஆண்டு பிறந்தார். அவரின் உடன்பிறப்பாக இளைப்பாறிய துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர் அமரர் கந்தையா வாய்க்கப் பெற்றார்.

நேசமலர் தனது ஆரம்பக்கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், உயர் கல்வியை மருதனாமடம் இராமநாதன் பெண்கள் கல்லூரியிலும் கற்று,

பரீட்சையில் சித்தியடைந்து,

பின்னர் தாய், தமையன், மைத்துனி சிவபாக்கியம் அவர்களின் அரவணைப்பில் இருக்கும் வேளையில்,

தனது தமையனின் மகன் ஜனந்திரனை தனது பிள்ளைபோல் வளர்த்து வரும் வேளையில்,

சித்தங்கேணியைச் சேர்ந்த முருகேசு செல்லம்மா தம்பதிகளின் நான்காவது மகன் திருநாவுக்கரசுவை

(இலங்கை மின்சாரசபை) 1971ம் ஆண்டு 02 ம் மாதம் 11ம் திகதி திருமணம் செய்து கொண்டார்கள்.

அவர்கள் இயற்றிய இல்லறப் பூஞ்சோலையில் மலர்ந்த மலர்களாக கஜேந்திரன், ஜெயந்தா, சுரேந்திரன் ஆகிய மக்களைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டு இருந்த வேளையில்

மருமகன் ஜனந்திரனை உழைக்கும் பருவம் வந்ததும் வெளியூருக்கு அனுப்பி அவருடைய திருமணப்பருவம் வந்ததும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காசிப்பிள்ளை தையல்நாயகியின் மகள் தயாளினியை திருமணம் முடித்து வைத்து,

அவர்கள் நடத்திய இல்லறப்பயனாக சஜீவன், சாதுகா ஆகிய பேரப்பிள்ளைகளைக்கண்டு இன்புற்றார்.

தனது மூத்தமகனான கஜேந்திரனை கணனித்துறையில் பயிற்றுவித்தார்.

தனது மகள் ஜெயந்தாவை வட்டுமேற்கைச் சேர்ந்த முத்துக்குமார் சறோஜினிதேவியின் மூன்றாவது புதல்வன் சிறிதரனை திருமணம் செய்து வைத்து இவர்களின் இல்லறத்தால் வைஸ்ணவி என்னும் பேரப்பிள்ளையைக் கண்டு மகிழ்ந்து. அவர்கள் கனடாவில் வாழ்ந்து வருகின்றார்கள்

தனது இளைய மகனாகிய சுரேந்திரனை வியாபாரத் துறையில் வழிகாட்டியதுடன் சங்கரத்தையைச் சேர்ந்த சிவானந்தன் - புவனேஸ்வரி தம்பதிகளின் மகள் கிரிஜா அவர்களையும் வாழ்க்கைத் துணையாக நிச்சியார்த்தம் செய்து வைத்துள்ளார்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் அம்மையார் தனது கணவரை 26.02.2003 ஆண்டு இழந்தார்.

அமரர் பத்திரகாளி அம்பாள் ஆனி உற்சவ 3ம் திருவிழாவையும், துறட்டிப்பனை முத்துமாரி அம்மன், 2ம் திருவிழாவையும், செய்வனே செய்து வந்தார்கள்.

தன் வீட்டிற்கருகில் உள்ள காளிகோவிலை திறம்பாட பரிவாரித்து வந்த அமரர் அவர்கள். கல்லியந்திடல் நாகதம் பிரான் ஆலய சங்காபிசேக உற்சவம். நல்லூர் கொடியேற்ற உற்சவம் ஆகிய திருவிழாக்களைக் கண்டு களித்து பேரானந்தம் பெற்றார்.

இவர் அன்பாகவும், பணிவாகவும். பொறுமையாகவும் தனது பிள்ளைகளுக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்த தீபம்.

அதிகாலை 5.00 மணியளவில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பு நோயினால் தனது இரு ஆண்பிள்ளைகளுடனும் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் உயிர் அவரை விட்டுப் பிரிந்து இறைவனுடன் இரண்டறக்கலந்தது.

அன்னாரின் ஞாபகமாக விநாயகர் அநுபூதி, கோமாதா, அபரக்கிரியைகள். போன்ற அம்சம் அடங்கிய **நேசமலரை** வெளியிடுகிறோம். அமரரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை.**

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்.**

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு.**

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் 3ஆம் திருமுறை

பண் - கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே.

திருநாவுக்கரசு நாயனார் 4ம் திருமுறை

பண் - காந்தார பஞ்சமம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

பண் - தக்கேசி

விரைசெய் மாமலர்க் கொன்றையினானை
வேதகீதனை மிகச்சிறந் துருகி
பரசுவார் வினைப் பற்றறுப்பானை
பாலொடானைஞ்சு மடவல்லானை
குரைகடல்வரை ஏழுலகுடைய
கோனை ஞானக் கொழுந்தினைத் தொல்லை
நரைவிடையுடைய நள்ளாறனையமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே.

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட் டுதிகண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்திர
கோசமங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே.

## திருவிசைப்பா

வையவாம் பெற்றம் பெற்றமேறுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
மெய்யவாஞ் செந்தீப் பட்டவிட்டிகைபோல்
விழுமியோன் முன்பு பின்பென்கோ
நொய்யவா றென்ன வந்துவீற்றிருந்த
நூறுநூறாயிர கோடி
வையவாங் கண்டத் தண்டவானவர்கோன்
மருவிடந் திருவிடைமருதே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருக
விழவொலி விண்ணளவுஞ் சென்றுவிம்மி
மிகுதிருவாரூரின்
மழவிடையார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடுங் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சடைமருங்கின் இளம்பிறையும் தனிவிழிக்கும் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற்கருள்கொடுத்தான்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.
திருச்சிற்றம்பலம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.



உ
*சிவமயம்*

# விநாயகர் அநுபூதி
## (மூலமும் - உரையும்)

### நாநலம் பெற

1. பூவார் புனிதா! புவனத்தலைமைத்
தேவா! கரியின் சிரமே உளவா!
மூவாத் தமிழால் முறையே உனைஎன்
நாவால் புகழும் நலமே அருள்வாய்.

**பொழிப்பு:-**

அழகு பொருந்தியவனே! ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் தலைவன் ஆனவனே! யானையின் முகத்தைக் கொண்டவனே! நான் உன்னைப் பழைமையான தமிழால் புகழ்ந்து பாடும் வலிமையை எனக்கு அருள்வாய்!

### சொல் வன்மை பெற

2. வில்லாண் மையரும் விரிமா தமிழில்
வல்லாண் மையரும் வளமாய்ப் புகழும்
நல்லாண் மையது நனியே மிளிரும்
சொல்லாண் மைகொடு எந்துரியப் பொருளே!

**பொழிப்பு:-**

துரியப் பொருள் ஆனவனே! தோள் வலிமை மிக்கவரும், தமிழில் புலமை மிக்கவர்களும் உன்னைப் புகழ்வார்கள். அவ்வாறே நானும் உன்னைப் பாடசொல்வன்மையை எனக்குக் கொடுப்பாயாக!

## கீழ்மைப் பண்புகள் அழிய

3. காமா திகளாம் கயமைப் பிணிகள்
போமா(று) அருள்வாய் புரைதீர்த்து எனைஆள்
கோமா! கருணைக் குகனார் தமையா!
பூமா! பொலமார் புலவா! வருவாய்!

**பொழிப்பு:-**

தலைவனே! முருகனின் சகோதரனே! பூவுலகுக்குத் தலைவனே! ஞான வடிவான புலவனே! காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் கீழ்த்தரமான பண்புகள் என் உள்ளத்திலிருந்து போகும்படி அருளி, என் குற்றம் தவிர்த்து, என்னை ஆட்கொள்வாயாக!

## முழு முதலை உணர

4. அந்தே வர்களும் அயன், மால் அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்
கத்தா கரிமா முகத்தான் எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே!

**பொழிப்பு:-**

தேவர்கள், திருமால், நான்முகன், சிவபெருமான், சைவசித்தாந்திகள் போன்றவர்களால் 'வழிபடுவதற்கு உரிய முழுமுதற் கடவுள் விநாயகனே ஆவான்!' என்று புகழப்படும் விநாயகனே!

## குருவாய் வந்து அருளுவான்

5. காவா எனைஐங் கரனே! மதுரப்
பாவா ணர்புகழ் பரமென் குருவே!
நீவா விரைவாய் நிமலன் புதல்வா!
தாவா கருணைத் தளிர்சே வடியே!

பொழிப்பு:-

ஐந்து கைகளை உடையவனே! என்னைக் காப்பாய். இனிமையாகப் புலவர்களால் பாடப்படும் குருவே! தூய்மையான வடிவுடைய சிவபெருமானின் மைந்தனே! நீ வருவாயாக. குற்றமில்லாத கருணையைப் பொழியும் தளிர் போன்ற செம்மையான அடிகளை உடையவனே!

## பேரின்பம் பெற

6. ஒருகொம் புடையான்; உயர்மோ தகமே
விரும்பும் பெருமான்; விடையோன் குமரன்;
சுரும்பார் தொடையன்; சுகமா குமெலாம்
அருள்வான்: அருள்வான்; அடியார் அவர்க்கே!

பொழிப்பு:-

ஒற்றைக் கொம்பை உடையவன்; மோதகத்தை விரும்பும் பெருமான்; சிவபெருமானின் மைந்தன்; வண்டுகள் மொய்க்கும் மாலையை உடையவன்; அடியவர்களுக்கு இன்பங்களை அருள்வான்.

## விதியினால் வரும் வேதனை நீங்க

7. பேழ்வாய்ப் பெரியோன் பெரும்பூங் கழலைச்
சூழ்வார், பணிவார், துதிப்பார் அவர்க்கே
ஊழ்வே தனைதீர்த்(து) உளமே மகிழ
வாழ்வே தரும்வல் லபைநா தனரே!

பொழிப்பு:-

சிறப்புப் பொருந்திய வாயினை உடைய விநாயகனின் மலர் போன்ற திருவடிகளே அணுகுபவர். பணிந்து வணங்குபவர். புகழ்ந்து பாடுபவர் ஆகியவர்களின் முன்வினைப் பயனைத் தீர்த்து. நல்ல வாழ்வைத் தருபவன் வல்லபையின் நாதனே ஆவான்.

## பேய், பூதம், பில்லி, சூனியங்களால் வரும் துன்பங்கள் அகல

8. பேய்பூ தமொடு பிலிசூ னியமும்,
பாய்வேங் கையதும் பரையின் அருமைச்
சேய்வா ரணனார் திருப்பேர் புகலப்
போய்மாய்ந் திடுமே புனிதம் வருமே!

**பொழிப்பு:-**

பராசக்தியின் புதல்வனாகிய விநாயகனது திருப்பெயரைச் சொல்லுபவருக்குப் பேய். பூதம். பில்லி. சூனியம் போன்றவற்றாலும். வேங்கை முதலிய விலங்குகளாலும் விளையும் தீமைகள் போகும். தூய்மையும் வந்தடையும்.

## நல்ல புலமை பெற

9. பல்காப் பியங்கள் பகரும் திறமும்
ஒல்காப் புகழும், உயர்செல் வமதும்
நல்காய் நலமாய், நளின மலர்த்தாள்
செல்வா! திகழ்சித் திவிநா யகனே!

**பொழிப்பு:-**

அழகான மலர் போன்ற அடிகளை உடைய செல்வனே! சித்தி விநாயகனே! நான் பலவகைக் காப்பியங்கள் இயற்றும் திறமையும். அழியாத புகழையும். சிறந்த செல்வத்தையும் பெற அருள்வாய்!

## சிறியவனும் அருள் பெற

10. பூந்தார் சூழல் வில் புருவம், தளிர்போல்
ஆந்தே கம்மிளிர் அணியார் இருவர்
சார்ந்தே விளங்கும் தனிமா முதலே!
தேர்ந்தே தொழுதேன் சிறியேற்(கு) அருளே!

பொழிப்பு:-

மாலையை அணிந்த கூந்தலையும், வில் போன்ற புருவங் களையும், இளந்தளிர் போன்ற உடலினையும் பெற்றிருக்கும் சித்தி, புத்தி என்ற தேவிமார் இருவரையும் பெற்று எழுந்தளி யிருக்கும் ஒப்பில்லாத முதல்வனே! உன்னைத் தொழுதேன். சிறிவனாகிய எனக்கும் அருள் செய்வாயாக!

## புலன்களை அடக்க

11. வஞ்சப் புலன்என் வசமாய் நிசமாய்க்
கொஞ்சிக் குலவிக் குணமாய் மிளிர
எஞ்சித் தமதில் இனிதே உனது
கஞ்சக் கழல்வை கணநா யகனே!

பொழிப்பு:-

தேவர்களுக்கெல்லாம் தலைவனே! என்னை வஞ்சித்துத் தீய வழியில் சேர்க்கும் ஐம்புலன்களும் என் அறிவுக்கு உட்பட்டு நல்ல செயல்களைச் செய்பவையாய் மாறி ஒளி விடுவதற்கு, என் சித்தத்தில் உனது தாமரை போன்ற அடிகளை வைப்பாய்!

## வறுமை நீங்கிச் செல்வம் பெருக.

12. பொல்லா வறுமை, புரைசால் கொடுநோய்
எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே
வல்லாய் வருவாய்; வளமே தருவாய்;
உல்லா சமிளிர் ஒருகை முகனே!

பொழிப்பு:-

அழகான துதிக்கையை உடையவனே! பாவங்களைச் செய்யத் தூண்டும் வறுமையையும், கொடிய நோய்கள் எல்லாவற்றையும் அழித்து என்னை ஆண்டு கொள்ள வல்லமை பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு வளங்களைத் தருவாய்.

## இப்பிறவிப் பயன்பெற்று வீடுபேறு பெற

13. மகத்தாய் அணுவாய், மதியாய்க், கதிராய்,
செகத்தாய், அறிவாய்த் திகழ்சாட் சியதாய்,
அகத்தும், புறத்தும் அகலாப் பொருளாய்,
இகத்தும் பரத்தும் இருக்கும் பரமே!

பொழிப்பு:-

பெரியதாயும். அணுவாயும். சந்திரனாயும். சூரியனாயும். சகமாயும். அறிவாயும். நல்வினை தீவினைகளுக்குச் சாட்சியாயும். அகத்திலும் புறத்திலும் அகலாத பொருளாயும். இம்மைப் பயனாயும். மோட்சமாயும் திகழும் விநாயகனே!

## நிறைந்த அருளைப் பெற

14. கருணைக் கடபுலைங் கரனே! கபிலர்க்(கு)
அருளே கொடுத்தாய்; அபயம் அளித்தாய்!
தருவே அனையாய்! தமியன் தனைஆள்
குருவே பொறுமை குணநா யகனே!

பொழிப்பு:-

கருணைக் கடலாகத் திகழும் ஐந்து கரத்தானே! கபிலருக்கு அருளைக் கொடுத்து. அடைக்கலம் தந்தாய். கற்பகமரம் போன்றவனே! தனியனான என்னை ஆளும் குருவே! பொறுமை மிக்க குணங்களுக்கெல்லாம் தலைவனே!

## அருட்பாடல்கள் இயற்ற

15. கற்பார் இதயக் கமலத்(து) உறையும்
அற்பார் ஒளியே! அழகுஆ னைமுகா!
பொற்பாய் உமது பொலந்தாள் மலர்க்கே
நற்பா கொடுத்தேன் நனிஏற்(று) அருளே!

பொழிப்பு:-

கற்பவர்கள் உள்ளத் தாமரையில் ஒளியாக எழுந்தருளுபவனே! அழகிய ஆனை முகத்தவனே! உன் பொன் போன்ற திருவடிகளுக்கு நல்ல பாமாலையை நான் கொடுத்தேன். இதை நீ ஏற்றுக்கொண்டு அருள் புரிவாயாக!

## செய்த பிழைகள் எல்லாம் தீர

16. ஆற்றல் அறியேன் அடிசெய் பிழைதீர்
சீற்றம் தவிர்வாய் திகழ்சிற் பர! யான்
சாற்றும் தமிழ்மா லைதனைத் துதிக்கை
ஏற்றே அருள்வாய்! அருள்வாய இனிதே.

பொழிப்பு:-

உன் கருணைத்திறம் அறியாத நான் உன் திருவடிகளில் செய்த பிழைகளைத் தீர்ப்பாய்! கோபம் தவிர்ப்பாய்: பரம்பொருளானவனே! நான் இயற்றிய தமிழ் மாலையை உனது துதிக்கையில் ஏற்று அருளுவாய்!

## எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெருக.

17. எந்தப் பிறப்பை எடுத்தா லும்உனைச்
சொந்தத் தமிழால் துதிசெய் திடவே
கொந்தே அலர்தார்க் குழல்வல் லபையாள்!
சிந்தைக்(கு) உகந்தாய்! சிறப்பாய் அருளே!

பொழிப்பு:-

மணம் வீசும் மலர் மாலைகளை அணிந்த வல்லபையின் மனத்திற்கு உகந்தவனே! நான் எந்த வகையான பிறப்பினை எடுத்தாலும் உன்னை என்னுடைய தமிழ்மொழியால் போற்றி வழிபட எனக்கு அருள்செய்வாய்.

## பழைய பாவங்கள் தீர

18. சிந்தா மணிதான் திகழ்மார் புடையாய்!
முந்தை வினையை முழுதும் தொலைத்(து) ஆள்
எந்தாய்! எளியேன் எனைநீ எழிலாய்
வந்துஆள்! உயர்ஓ வடிவப் பொருளே!

**பொழிப்பு:-**

என் தந்தையே! பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்குபவனே! சிந்தாமணி விளக்கும் மார்பை உடையவனே! முற்பிறப்பு வினைகளை முழுதும் தொலைத்து எளியவனாகிய எனக்கு முன் அழகாகத் தோன்றி வந்து ஆள்வாயாக!

## வலிமை பெற

19. பகையார் அவர்முப் புரமே பொடியா
நகைசெய் தபிரான் நலமாம் கனியை
வகையாய் அருள வலம்வந் தவனே!
தகையாய்! திடம்நீ தருவாய் மணியே!

**பொழிப்பு:-**

முப்புரங்களையும் தன்னுடைய சிரிப்பினால் பொடிசெய்த சிவபெருமான், ஞானப்பழத்தினை உனக்கே கொடுக்கும்படி, அவனையும், உமையம்மையையும் வலம் வந்தவனே! சிறந்த பண்பை உடையவனே! எனக்கு வலிமையைத் தந்தருள்வாய்.

## எல்லாச் செல்வங்களும் பெற

20. சீரோங் கிடும்நல் திறமும் பெருகும்;
ஏரோங் கிடுமே; இனிதாம் திடமே
பேரோங் கிடும்நல் பெரும்வே ழமுகன்
தாரோங் கடியைத் தொழுவார் தமக்கே!

பொழிப்பு:-

யானை முக விநாயகனின் திருவடிகளைத் தொழுபவர்களுடைய புகழ் ஓங்கும்; நன்மைகள் பெருகும்; அழகு மிகும் வலிமை மிகுதி ஆகும் என்பது உறுதி.

## குழந்தைப்பேறும் செல்வமும் பெற

21. மகப்பே(று) அருள்வான்: மகிழ்வாய் நிதியை
அகத்தே தருவான்: அணியன்: கரிமா
முகத்தான் அடியை முறையாய் நிறையாய்ச்
செகத்தீர் தொழுமின்! தொழுமின்! தினமே!

பொழிப்பு:-

விநாயகன் குழந்தைப் பேற்றினை அருள்வான்; இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சியுடன் செல்வத்தைத் தருவான்; அவன் அருகிலேயே இருப்பான்; விநாயகனின் திருவடியை முறையாக நாள்தோறும் தொழுவீர்களாக.

## நவக்கிரகங்களும் நல்லருள் புரிய

22. பெருமைப் பரிதி, பிறை, இத் தரைசேய்,
அருமால், குருவே, அரசர் குரவன்,
கருமை அரவு கள்இவை நலமாம்
ஒருகை முகன்பேர் உரைப்பார் அவர்க்கே!

பொழிப்பு

சூரியன். சந்திரன். செவ்வாய். புதன். வியாழன். வெள்ளி. சனி. இராகு. கேது ஆகிய ஒன்பது கிரகங்களும். விநாயகருடைய திருப்பெயரை உச்சரித்தவர்களுக்கு எப்பொழுதும் நன்மைகளையே செய்யும்.

## மன அமைதி பெற

23. ஓடித் திரிவாய் உலகுஏ ழும்மிக
வாடித் திரிவாய் மனனே! தகுமோ
கூடிக் குலவா ஒருகோ டனைநீ
பாடிப் பணிவாய் பணிவாய் நலமே!

பொழிப்பு:-

என் மனமே! அமைதியைத் தேடி ஏழு உலகங்களிலும் திரிந்தாய். இது உனக்குப் பொருத்தமுடையது அன்று. ஒற்றைக் கொம்பை உடைய விநாயகனைக் கூடுவாய்! பாடிப் பணிவாய்!

## பயமின்றி வாழ

24. ஏகாக் கரனை எழில்ஐங் கரனைப்
பூகாப் பவனைப், பொறுமைக் குணனை,
மாகா ளியவள் மகனை, மனனே!
நீகா எனவே நிதமும் பணியே!

பொழிப்பு:-

மனமே ஓங்கார வடிவை உடையவனை. அழகிய ஐந்து கரங்களை உடையவனை. உலகைக் காப்பவனை. அடியார்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவனை. சக்தி மகனாகிய விநாயகனை அடைந்து. 'நீ காப்பாய்!' என்று நாள்தோறும் பணிவாயாக!

## நலங்கள் பல வந்து சேர

25. தேடிப் பணிவார் சிலபேர்; சிறப்பாய்
ஆடிப் பணிவார் சிலபேர்; அணியாய்ப்
பாடிப் பணிவார் சிலபேர்; அவரை
நாடித் தருவான் நலம்ஐ முகனே!

பொழிப்பு:-

விநாயகப் பெருமானைச் சிலர் தலங்கள் தோறும் தேடிச்சென்று பணிவார்கள்: சில பேர் அவனைப் பாடி. ஆடிப் பணிவார்கள்; சில பேர் கூட்டம் கூட்டமாய் கூடிப் பாடிப் பணிவார்கள். இவ்வாறு பக்தி செய்பவர்களைத் தேடிப்போய் விநாயகன் நலன்கள் பலவற்றைத் தருவான்.

## பகை நீங்க

26. துட்டர் குதர்க்கர் தொலைந்தே பொடியாய்ப்
பட்டே இரியப் படையை விடுவாய்!
சிட்டர் புகழும் திறமே! வளரும்
மட்டில் மதமார் மழலைக் களிறே!

பொழிப்பு:

பொல்லாதவர்களும், முறையில்லாமல் வாதம் செய்பவர்களும் பொடிப் பொடியாகப் போகும்படி, தன் திருக்கரத்தில் உள்ள படைக்கலத்தை விடுபவனே! நல்லவர்கள் புகழும் உறுதிப் பொருளே! அளவில்லாமல் கருணையாகிய மதநீர் பொழியும் அழகிய விநாயகரே!

## இதமான வாழ்வு பெற

27. விண்நீ; உடுநீ மிளிர்வா யுவும்நீ;
மண்நீ; அனல்நீ; புனல்நீ; மதிநீ;
கண்நீ; மணிநீ; கவினார் ஒளிநீ;
எண்நீ; எனைஆள் இதம்செய் பவனே!

பொழிப்பு:-

வானும் நீ அதில் விளங்கும் விண்மீன்களும் நீ; திகழும் காற்றும் நீ; நிலம் நீ; நெருப்பு நீ; தண்ணீர் நீ; சந்திரனும் நீ; இவற்றைக் காணும் கண் நீ; கண்ணினுள் மணி நீ; அதில் ஒளிரும் ஒளி நீ; எண்ணப்படுகின்ற பொருள் நீ; என்னை ஆட்கொண்டு நன்மை செய்பவனே!

## நல்ல வழியில் செல்ல

28. தீய நெறிநாத் திகத்தில் திளைத்தே
ஆய நெறியை அறியா திருந்தேன்
தூய நெறியின் தொடர்காட் டினைநீ
ஆயும் நெறியும் அறிவித் தனையே!

பொழிப்பு:-

விதிவசத்தால் நாத்திகத்தில் உழன்றேன்: உன் அருளைப் பெறும் சன்மார்க்க வழியை அறியாமல் காலம் கழித்தேன்: தூய்மையான பக்தி வழியைக் காட்டினாய். நான் உய்யும் நல்ல வழியை அறிவித்தாய்.

## பிறவித் துன்பம் நீங்க

29. தொல்லைப் பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ?
செல்வா! பிரமச் செழுமா மணியே!
நல்லாய் கரைஏற் றிடும்ஐங் கரனே!

பொழிப்பு:-

நான் தொடர்ந்து வரும் பிறவியாகிய துன்பக் கடலில் மூழ்கி அழுந்திக் கிடப்பது முறையோ? செல்வனே! பிரமனும் போற்றும் மணியே! நன்மை புரிபவனே! என்னைக் கரை ஏற்றிடும் ஐந்து கரமுடையவனே!

## அறியாமை அழிய

30. மாயை எனும்கார்த் திரையைத் தெரித்துஎன்
பேயை விரட்டும் பெருமான் ஒருவன்:
தாயை நிகர்த்த தனிமா முதல்வன்:
காயைக் கனிஆக் குவன்கண் ணியனே!

பொழிப்பு:

உயர்ந்தவனே! நீ மாயை என்னும் கரிய திரையைக் கிழித்து. என் மனத்தில் தோன்றும் அச்சமாகிய பேயை விரட்டக் கூடிய பெருமான். தாயைப் போன்ற ஒப்பற்ற முதல்வனே! காயையும் கனி ஆக்குவது போல்; பக்குவம் இல்லாத என்னையும் பக்குவப் படுத்துபவனே!

## நன்மைகள் பெற

31. அயில்கை உளநம் அறுமா முகற்கே
மயிலூர் திதனை மகிழ்ந்தே அளித்தான்:
செயிர்தீர அடியார் சிறப்பாம் வகையில்
ஒயிலாய் நலம்தந்(து) உயர்த்தும் அவனே.

பொழிப்பு:-

அடியார்கள் சிறப்படையும்படி நன்மைகளைச் செய்து, அவர்களை உயர்த்துபவன் விநாயகப் பெருமானே ஆவான். அவன் வேலைத் தாங்கிய முருகனுக்கு மயிலை வாகனமாக மகிழ்ந்து அளித்தான்.

## அர்ச்சித்து அருளைப் பெற

32. கரிமா முகனின் கருணை அறியார்
எரிவாய் நரகில் இடரே படுவார்:
விரிமா தவரும் விரும்பும் பெரியோன்
அரிதா அருச்சித்(து) அவனைப் புகழே.

பொழிப்பு:-

யானை முகத்தவனின் கருணைத் திறத்தை அறியாதவர்கள் வெம்மையான நரகத்தில் துன்பப்படுவார்கள். தவத்தை விரும்பிச் செய்யும் தவசிகள் விரும்பும் விநாயகனை வழிபட்டு அவனைப் புகழுங்கள்.

## எண்வகைச் சித்திகளைப் பெற

33. இருநான்(கு) அவதா னம்எண்சித் திகளும்
பெருமான் உமையின் பெரும்பிள் ளையவன்
தருவான்! தருவான்! தரவே விரைவாய்
வருவான்! வருவான்! வழுத்தாய் மனனே!

பொழிப்பு:-

உமையம்மையின் மைந்தனான விநாயகன் எட்டு அவதானங்களையும், எட்டுச் சித்திகளையும் விரைவாக வந்து அருளுவான். அத்தகையவனை, மனமே! போற்றுவாயாக!

## பிரணவப் பொருளை உணர

34. கருமால் வினையைக் களைந்தே அருளும்
திருவைந் தெழுத்தும், திகழா றெழுத்தும்,
இருநான் கெழுத்தும் எமதுஐங் கரனார்
ஒருபேர் எழுத்தே: உணர்வாய் மனனே!

பொழிப்பு:-

இரு வினைகளையும் போக்கும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும், நம: குமராய என்னும் ஆறெழுத்தும், ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்தும், விநாயகருக்குரிய ஓம் என்னும் ஒரே எழுத்தில் அடக்கம் என்பதை, மனமே! உணர்வாயாக.

## இறை எண்ணம் பெற

35. அளவைக் கடந்தான்: அகிலம் கடந்தான்:
உளதத் துவத்தின் உயர்வைக் கடந்தான்:
வளமாம் நிலைமேல் வசிப்பான் பெரியோன்
உளமே அறிந்துஇன் புறவே வருவாய்!

பொழிப்பு:-

விநாயகன் பிரமாண அளவைகளுக்கு அப்பாற்பட்டவன்: இவ்வுலகைக் கடந்து நின்றவன்: முப்பத்தாறு தத்துவங்களின் உச்சியில் நின்று கடந்து நிற்பவன். அத்தகையவன் என்மனமாகிய இருப்பிடத்தை அறிந்து நான் இன்புறும்படி வரவேண்டும்.

## படித்தோர் துன்பம் நீங்க

36. கத்தும் தரங்கக் கடல்சூழ் புவியில்
திக்தித் திடும்செந் தமிழ்மா லைசெயும்
வித்தர் களின்தீ வினையை விலக்கும்
அத்தித் தலையன் அருட்பார் வையதே!

பொழிப்பு:-

கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில், இனிமையான செந்தமிழால் பாமாலை புனையும் கவிஞர்களின் தீவினைகளை எல்லாம் யானை முகத்தவன் அருட்பார்வை நீக்கிவிடும்.

## நல்ல கவி பாட

37. ஆரா அமுதம் எனஆ சுகவி
சீராப் புகலும் திறமே அருள்வாய்!
தீராக் கலைகள் திகழ்வா ரிதியே!
வாராய்! வளமே வளர்வா ரணனே!

பொழிப்பு:-

வளமெல்லாம் அளிக்கும் யானை வடிவானவனே! முடிவில்லாத கலைகளால் நிறைந்த கடலே! தெவிட்டாத அமுதம் போன்று ஆசு கவிகளை உன் புகழுக்காக நான் பாடும் ஆற்றலை அருள்வாய்!

## விநாயகனைக் கண்டு மகிழ

38. வேதா கமமே மிகவும் புகழும்
பாதாம் புயனே! பணிசெய் அடியேற்(கு)
ஆதா ர!நின(து) அருட்காட் சிதர
வாதா எழில் 'ஓ' வடிவா னவனே!

பொழிப்பு:-

வேதங்களும், ஆகமங்களும் புகழும் திருவடிகளை உடையவனே! தொண்டு செய்பவர்கட்கு ஆதாரமானவனே! அழகான ஓங்கார வடிவானவனே! உனது அருட்காட்சியை எனக்காக வந்து தருவாயாக!

## விநாயகனின் அருளைப் பெற

39. உம்பர் புகழும் உறுதிப் பொருளே!
தும்பிச் சிரனே! தொழுதேன்: தொழுதேன்:
நம்பும் எனைநீ நழுவ விடாமல்
அம்பொன் கரத்தாய் எனைஆண்(டு) அருளே!

பொழிப்பு:

தேவர்களெல்லாம் புகழ்ந்து பேசும் உறுதிப் பொருளே! யானை வடிவானவனே! உன்னைத் தொழுதேன். உன்னையே நம்பும் என்னைக் கைவிட்டு விடாமல் உன் அழகிய பொற்கரத்தால் ஆண்டு கொண்டு அருளுவாய்!

## குறை தீர

40. கவிஞன் புகலும் கவின்ஆர் தமிழ்உன்
செவிஎ றியும்நீ திருகல் சரியோ?
புவிதான் புகழும் புழைக்கைய! கரம்
குவிவேன்: மகிழ்வேன்: குறைதீர்த்தருளே!

பொழிப்பு:

கவிஞர்களால் புகழ்ந்து பேசப்படும் அழகிய தமிழ்ப்பாக்கள் உன் செவிகளில் விழுந்தும் நீ அருளாமல் இருப்பது சரியாகுமா? உலகத்தார் புகழும் தும்பிக்கையை உடையவனே! என் இரண்டு கைகளையும் குவித்தேன்: அதனால் மகிழ்ந்தேன்: என் குறைகளைத் தீர்த்தருளுவாயாக!

## அருள் மழையில் நனைய

41. மங்கை வலபை மணவா என்அருள்
பொங்கும் புனலபோல் பொழிந்தே புவனம்
எங்கும் நிறைந்தே இருக்கின் றதுகண்!
துங்கக் குணத்தீர்! புசியின் தொழுதே!

பொழிப்பு:

வல்லபையின் கணவனாகிய விநாயகனின் அருள் பொங்கி வெள்ளம் போல் இவ்வுலகமெல்லாம் நிறைந்து காணப்படுகின்றது. விநாயகனின் குணங்களைப் பாடுபவர்களே! அவன் கருணை வெள்ளத்தை வழிபட்டு அனுபவியுங்கள்.

## ஆணவம் அகல

42. மூல மலவா தனைதீர முதல்வா!
சீல செழும்செம் சடையன் சிவனார்
பால! உயர்தற் பரனே! அருள்தா!
கோலம் மிளிரும் குணமார் பொருளே!

**பொழிப்பு:**

மூல மலமாகிய ஆணவ மலத்தைத் தீர்க்கும் முதல்வனே! அற வடிவான சிவபெருமானுடைய மைந்தனே! உயர்ந்த பரம் பொருளே! அழகொளி வீசும் குணங்களால் நிறைந்த பொருளே! அருள் தருவாயாக!

## பக்குவம் பெற

43. சித்தி தரும்சத் திநிபா தமதே
எத்தி னமதில் எனைவந்(து) உறுமோ?
அத்தி முகவா! அருமைத் தலைவா!
சத்தி தனையா! தமியற்கு உரையே!

**பொழிப்பு:**

யானை முகத்தவனே! பெருமை மிக்க தலைவா! பராசக்தியின் மைந்தனே! பக்குவ ஆன்மாக்களிடம் திருவருள் பற்றுவதாகிய தன்மை எந்த நேரத்தில் என்னிடம் வந்து சேருமோ? எனக்குச் சக்திபாதம் வாய்க்கும் நாளை உரைப்பாயாக.

## துயரம் நீங்க

44. முதல்வா படவே முடியா(து) இனிநோ
இதமே அருளா(து) இருத்தல் எனை? பொற்
பதமே உடையாய்! பணிந்தேன்! பரையின்
புதல்வா அருளாய்! புரைதீர்ப் பவனே!

**பொழிப்பு:**

பொற்பாதங்களை உடையவனே! பராசக்தியின் மைந்தனே! அருள்வாய்! குற்றங்களைத் தீர்ப்பவனே! தலைவா! என்னால் இனித் துன்பப்பட இயலாது. என்ன காரணத்தினால் எனக்கு இன்னமும் அருள் புரியாமல் இருக்கிறாய்?

## பேரருள் பெற

45. சீலன் துதிக்கைச் சிரனை அனவே
ஞாலத் தினிலே நலம்ஈ வர்எவர்?
கோலச் சிகிவா கனனாம் குகனும்
சாலப் புகழும் தனிமன் அவனே!

பொழிப்பு:

யானை முகத்தனைப் போல உலகத்தில் இனி நன்மைகளை அருளுபவர் யார் உள்ளார்கள்? மயில் வாகனனாகிய முருகனாலும் மிகவும் புகழப்படும் ஒப்பற்ற தலைவன் விநாயகனே ஆவான்.

## கவலைகள் ஒழிய

46. திண்தோள் சதுரும், திகழ்ஐங் கரமும்,
வண்டார் குழலார் மகிழ்ந்தே மருங்கில்
பண்டே வளர்கோ லமதைப் பணிவாய்க்
கண்டேன். களித்தேன்: கவலை இலனே!

பொழிப்பு:

திண்மையான நான்கு தோள்களையும், ஐந்து கரங்களையும், இரண்டு பக்கங்களிலும் சித்தி புத்தியாகிய தேவிமார் இருவரையும் பெற்ற விநாயகனுடைய அழகிய கோலத்தைக் கண்டேன்: மகிழ்ந்தேன்: கவலைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கி விட்டன.

## ஞானம் பெற

47. மோன நிலையில் முழுசித் திபெறும்
ஞானம் தருவாய்! நலமார் பெரியோய்!
தீனன் எனைஆள் திருமன் கருணைத்
தேனம் எனவே திகழ்கின் றவனே!

பொழிப்பு:

அருள்நலம் மிக்க பெரியவனே! அருளாகிய கடல் போன்று திகழ்பவனே! நான் மௌனத்தில் மூழ்கி முழுமையான பரஞானம் பெற அருள்வாய்! அறிவிலியாகிய என்னை ஆள்வாயாக!

## பிறவி அச்சம் நீங்க

48. அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர் ஐங் கர!நின்
பச்சைத் தளிராம் பதமே பலமாய்
இச்சை யுடனே பிடித்தேன் இதமே!

பொழிப்பு:

சிவன் முதலானவர்கள் புகழும் ஐந்துகரத்தை உடையவனே! உன்னுடைய தளிர் போன்ற திருவடிகளை விருப்பத்துடன் பிடித்துக் கொண்டேன். அதனால் பிறவி அச்சத்தை விட்டேன்.

## சகல சித்திகளும் பெற

49. பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்;
முத்தி பெறுவார்; முதன்மை உறுவார்;
சித்தி அடைவார்; திடமே! திடமே!

பொழிப்பு:

பக்தி மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் யானைமுக விநாயகனின் திருவடிகளில் பணிவார்கள். அதனால் முத்தியைப் பெறுவார்கள். எண் வகைச்சித்திகளையும் பெறுவார். இஃது உறுதி.

## புகழைப் பெறுவதற்கு

50. தாதா சரணம்; சரணம் தளிர்த்தாள்
நீதா சரணம் சரணம்; நிகர்இல்
வேதா தரனே சரணம்; மிளிர்ஐம்
பூதா சரணம்! புகழ்நாற் புயனே!

**பொழிப்பு:**

தலைவனே! வேதங்களின் பொருளாக விளங்குபவனே! ஐம்பூதங்களானவனே! நான்கு தோள்களை உடையவனே! விநாயகனே! உனது தளிர் போன்ற பாதங்களை நான் சரணடைவதற்குத் தந்தருள்வாயாக!

## உலகம் வாழ


51. ஊழி முதல்வன் உயர்வே ழமுகன்
வாழி! திருசத் திகளும் அணியாம்
வாழி! கவினார் வாச மலர்த்தாள்
வாழி! அடியார் வளம்வா ழியவே!

**பொழிப்பு:**

உலகத்திற்கு முதல்வனான யானைமுகன் வாழ்க! அவனுடைய சித்தி, புத்தி தேவிகள் வாழ்க! அழகு நிறை அவனுடைய மலர்ப் பாதங்கள் வாழ்க! அடியார்கள் செல்வங்கள் பலபெற்று வாழ்க!

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் நன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.



GUBERAN
AGNI
BHARAMMAN
SARASWATI
KETHU
BARASARAN

## பசுவின் உடலில் உள்ள தேவர்களும், முனிவர்களும், தீர்த்தங்களும்

| | |
|---|---|
| கொம்பின் அடியில் | பிரமவிட்டுணுக்கள் |
| கொம்பின் நுனியில் | கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும் |
| சிரத்தில் | சிவன் |
| நடுநெற்றியில் | உமாதேவி |
| மேல் நாசியில் | முருகக் கடவுள் |
| உள் நாசியில் | நாகேசர் |
| இரு காதுகளிலும் | அச்சுவினி தேவர் |
| இரு கண்களிலும் | சூரிய சந்திரர் |
| பல்லில் | வாயு |
| நாவில் | வருணன் |
| ஊங்காரத்தில் | சரஸ்வதி |
| இருதயத்தில் | இயமன் |
| கெண்டைத்தலத்தில் | இயக்கர்கள் |
| உதட்டில் | உதயஅஸ்தமன சந்திகள் |
| கழுத்தில் | இந்திரன் |
| திமிலில் | அருக்கர்கள் |
| மார்பில் | சாத்தியர் |
| நான்கு கால்களிலும் | அனில வாயுக்கள் |
| முழந்தாள்களில் | மருத்துவர் |
| குரத்தின் நுனியில் | நாகலோகத்தார் |
| குரத்தின் நடுவில் | கந்தருவர் |
| மேற்குரத்தில் | தேவமாதர்கள் |
| முதுகில் | உருத்திரர் |

இல்லத்துக்கொரு பசு வளர்த்திடுவோம்
இல்லில் மகாலட்சுமி இனிதுறைவாள்.

| | |
|---|---|
| சந்திகள் | வசுக்கள் |
| அரைப்பலகையில் | பிதிரர்கள் |
| பகத்தில் | சத்தமாதர்கள் |
| அபானத்தில் | இலக்குமி |
| அடிவாலில் | நாகேசர் |
| வால் மயிரில் | சூரியன் ஒளி |
| மூத்திரத்தில் | கங்கை |
| சாணத்தில் | யமுனை |
| உரோமத்தில் | முனிவர்கள் |
| உதரத்தில் | பூமாதேவி |
| முலையில் | சமுத்திரம் |
| வயிறு, இருதயம், முகம் | காருகபத்தியம் முதலிய அக்கினி மூன்றும் |
| எலும்பிலும் சுக்கிலத்திலும் | யாகங்கள் |
| எல்லா அவயங்களிலும் | கற்புடைய மகளிர் |

நன்றி - சிவதருமோத்திரம்

## கோதானம்

இறக்கப்போகின்றவர் மரணசமயத்திலே தாம் செய்த பாவங்கள் நீங்கிச் சுககதிப் பேறெய்தவேண்டிக் கோதானம் முதலியவற்றைப் பிராமணரை வரித்துச் செய்க. அல்லது இறக்கப்போகின்றவரைக் குறித்து அவர் புத்திரர் முதலாயினோரும் செய்யலாமென நூல்கள் கூறும்.

சித்தார்த்த தீபிகை

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

கோபூசை செய்து கும்பிடுவோம்
பாவமகன்றிட இன்புறுவோம்.

உ
சிவமயம்

# கோமாதா

" பசு பால் தரும்" - 'பசு சாதுவான மிருகம்' என்பது நாம் பாலர் வகுப்பில் படித்த பாடம்.

* தாய் தன் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் பாலூட்டி வளர்ப்பாள். நம் அனைவர்க்கும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப்பருவம்வரை பால் தந்து காப்பது பசு.

* நம் உயிர் பிரியும் வேளையிற்கூட இறுதியாக ( உற்றார், உறவினர்)எம் வாயில் விடப்பால் தருவது பசு.

* ஆதலால் தாய்மார்களுக்கெல்லாம் அரசியாகவும், ( கோ - அரசு - மாதா - தாய்) பசுத் தாயாகவும் (கோ - பசு, மாதா - தாய்) கோமாதா எனப் போற்றப்படுவது பசு.

* நாம் கழித்துவிடும் புல், தவிடு, கஞ்சி, கழுநீர், வைக்கோல், புண்ணாக்கு, இலை, குழை முதலானவற்றை உண்டு அதிசயிக்கத்தக்க வகையில் பூரண சத்துள்ள பாலைத் தருவது பசு.

* தனது கழிவுப் பொருள்களான சாணியையும், மூத்திரத் தையும்கூட பயிர் வளர்க்கும் உயர்ந்த இயற்கை உரமாகவும், கிருமிநாசினியாகவும் தருவது பசு.

* நமது வீட்டையும் சுற்றாடலையும் கூடச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உபகாரமான சாணியைத் தருவது பசு.

* எல்லா தேவர்களும், முனிவர்களும், புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் எழுந்தருளி இருத்தற்குரிய தெய்வத்திருவுரு பசு.

* எல்லாத் தேவர்களின் அனுக்கிரகத்தையும் பெறுவதற் குரிய வழிபாட்டுப் பொருளாயிருப்பது பசு.

பசுவில்லாத வீடு பாழ்
பசுவுள்ள வீடு வாழ்

* சைவசமயக் கிரியைகள் அனைத்தின் ஆரம்பத்திலும் செய்யப்படும் புண்ணிய ஆவாகனத்துக்குரிய பாலைத் தருவது பசு.

* இறைவன் உவக்கும் அபிஷேகத்துக்குரிய பஞ்ச கௌவிய மாகிய பால், தயிர், நெய், கோமயம், கோசலம், என்பவற்றைத் தரும் தெய்வீகத் தன்மை யுடையது பசு.

* சைவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிட்டை செய்யும் முன் கருவறையைத் தூய்மை செய்து தேவர்களின் ஆசியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படுவது பசு.

* சைவாலய நித்தியபூசையில் கோபூசை செய்து மலரிட்டுத் தூபதீப ஆராதனை செய்து பிரசாதம் கொடுத்து வணங்கப்படுவது பசு.

* சிவபூசையின் இறுதியில் செய்யப்படும் கபிலபூசைக்கு உரியது பசு.

* கோதானப் பொருளாவதன் மூலம் பாவம் நீங்கிப் பெரும் சிவ புண்ணியத்தை ஈட்டித்தருவது பசு.

* சிவகதி நல்கும் சிவஞானமான திருநீற்றின் மூலப்பொரு ளான சாணியின் உற்பத்தித் தானமாயிருப்பது பசு.

* புதுவீடு அமைக்கும்போது தான சுத்திக்காக அங்கு கட்டப்படுவது பசு.

* திருமணத்தின்போது மாங்கல்யதாரணம் முடிந்தவுடன் எல்லாத் தேவர்களின் ஆசீர்வாதத்தையும் பெறுவதற் காகத் தரிசனமாவது பசு.

* மணமக்கள் நாள் முகூர்த்தத்தில் அருந்துவதற்குரிய பால் பழத்துக்கான பாலைத் தருவது பசு.

* அபரக்கிரியையில் அந்தியேட்டி முடித்து வீட்டுக்கு வரும்போது வாயிலில் தரிசனமாவது பசு.

**பசுவில்லா நாடு பாழடைந்த காடு.**

இவ்வண்ணம் நம் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளிலும் உடனிருந்து எம் வாழ்வைப் புண்ணிய நெறிப்படுத்தவல்ல பசுவைப் போற்றி வளர்ப்பது நம் தலையாய கடமையாகும்.

பசுவுக்கு உணவு கொடுத்தல் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமை என்பது **'யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை'** எனும் திருமூலர் திருமந்திரத்தால் உணரப்படும்.

பசு ஓம்புதல் இம்மை மறுமையாகிய இருமைப் பயனையும் தரவல்லது.

திருமூலர், சண்டேசுரர், ஆனாய நாயனார், மனுநீதி கண்ட சோழன், ஞானப்பிரகாசமுனிவர் பசு ஓம்புதல் மூலம் சிவகதி பெற்ற செய்திகள் இதற்கு ஆதாரமாகும்.

**திருமூலர்**

இமயத்திலிருந்து தென்னாடு நோக்கி வந்த சுந்தர முனிவர் என்பவர் வரும் வழியில் பசு மேய்க்கும் மூலன் எனும் இடையன் இறந்து கிடப்ப அவனைச் சூழ்ந்து நின்று பசுக்கள் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதைக் கண்டார். பசுக்களின் துயர் துடைக்காது செல்வது பாவமெனக்கருதித் தன்யோக சித்தியினால் தனது உடலை ஒரு மரத்தின்மேல் கிடத்திவிட்டு மூலன் உடலிற் புகுந்து பசுக்கள் மகிழுமாறு செய்து அவற்றை உரியோரிடம் சேர்ப்பித்தார். மீண்டு வந்தபோது தன் உடலைக் காணாமையால் இறைவன் ஆணைப்படி அவ்விடத்தில் தவமிருந்து மூவாயிரந் தமிழ் எனும் திருமந்திரத்தைத் தந்து திருமூலநாயனார் எனும் சிறப்புப் பெயர் மந்திரத்தைத் தந்து திருமூலநாயனார் எனும் சிறப்புப்பெயர் பெற்றுச் சிவகதி அடைந்தார். பசு காத்ததாலே திருமூலரானார்.

**சண்டேசுரர்**

பசு மேய்ப்பவன் ஒருவன் பசுவைக் கோலால் அடிப்பதைக்கண்டு மனம் பொறுக்கமாட்டாத விசாரசருமர்

*கோ தானம் செய்திடுவோம்*
*குன்றாப் புண்ணியப் பேறடைவோம்.*

எனும் பிராமணச் சிறுவன், அன்று முதல் மேய்ப்பானை விலக்கித் தானே பசுக்களை மேய்த்து வந்தான். மண்ணியாற்றங்கரையில் முறையாகப் பசுக்களை மேய்த்து அவை தானாகச் சுரந்து பொழிந்த பால் கொண்டு அப்பால் வீணாகா வகையில் மணலில் அமைத்த சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து வழிபட்டார். இதன் உண்மையை அறியாத மூடர்சொற் கேட்ட தந்தையார் **'பாலை மண்ணில்சொரிந்து பாழ் செய்கிறானே'** என அதைக் காலால் இடறத் தன் சிவபூசைக்குக் குந்தகம் செய்தவர் காலைச் சிறுவன் கோலால் அடிக்க, அது மழுவாகித் தந்தையின் கால்கள்தறிக்கப்பட்டன. சிவபூசையின் உறுதி கண்ட சிவபெருமான் தந்தைக்கும் தனயற்கும் அருள்புரிந்து விசாரசரு மருக்குச் சிவவழிபாட்டின் பயன் நல்கும் சண்டேசுரர் பதம் நல்கினார். பசு ஓம்பலின் பயன் சண்டேசுரர் பதம் நல்கியது.

### ஆனாய நாயனார்

பசுக்குலம் மேய்த்தலையே சிவப்பணியாகக் கொண்டவர். புல்லாங்குழல் இசைக்கும் பேரிசையாளர். பஞ்சாட்சர மந்திரத்தைப் புல்லாங்குழலில் இட்டு இசைத்து பசுக்களை மகிழச் செய்பவர். இவரது பஞ்சாட்சர இசையில் தேவர்களும் தம்மை மறந்து மகிழ்ந்தனர். சிங்கம் , புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளும் தம் மூர்க்கம் தணிந்து தெய்வ இசைப்பட்டன. இசையால் பசு மேய்த்த சிவபுண்ணியத்தால் ஆனாயர் சிவபதம் பெற்றார்.

### மனுநீதிகண்ட சோழன்

தன் மைந்தன் அரச வீதியில் உலாவரும்போது தேரின் இடைப்புகுந்த பசுக்கன்று அடியுண்டு இறந்தது. இதனைக் கண்ட தாய்ப்பசு தாங்கொணாத் துயரால் கண்ணீர்விட்டுக் கதறி அழுதது. இதை அறிந்த மன்னன் பெருந்துயர் உற்றான். மந்திரிகள் சொன்ன வழிமுறைகள் பசுவின் துயரைத்துடைக்க உதவா என உணர்ந்தான். கன்றை இழந்து வருந்தும் தாய்ப்பசு

தன் பிள்ளைக்குப் பால் தருவாள் மாதா
எல்லாருக்கும் பால் தருவாள் கோமாதா

போலத்தானும் தன் ஒரே மகனை இழந்து வருந்துவதே முறை எனத் துணிந்தான். தன் மகனை வீதியிற் கிடத்தித் தானே அவன் மீது தேர் செலுத்திக் கொன்றான். **"தருமம் தன் வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன் மருமந்தன் தேராழி உற ஊர்ந்த அருமந்த செயல்"** கண்ட சிவபெருமான் அருளால் பசுக்கன்றும், அரசிளங் குமரனும் உயிர்பெற்று அனைவரும் சிவகதி பெற்றனர். ஒரு பசுவின் கன்றைக் கொன்றதற்காகத் தன்மகனைக் கொன்று பசு ஓம்பிற் பரகதி பெற்றார் மனுநீதிச்சோழன்.

**ஞானப்பிரகாச முனிவர்**

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி நடந்த காலம்; யாழ்ப்பாணத்தில் கொலையும் புலாலும் மறுத்த சைவ மக்கள் வாழ்ந்த காலம். போர்த்துக்கேயப் பறங்கியர்க்கு உணவாக நாளுக்கொரு வீட்டார் பசு கொடுக்கவேண்டிய கொடிய சட்டம். தன் முறை வந்தபோது பசுக்கொலையாகிய கொடிய பாவம் செய்வதிலும் பார்க்க பரதேசம் போவதே மேல் எனக்கருதி இரவோடிரவாக கடல் கடந்து இந்தியா சென்றவர் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். அங்கு சிதம்பரம் சேர்ந்து தவமியற்றிச் சிவஞானம் பெற்றுச் சிவகதி சேர்ந்தார். பசுக் கொலைக்கஞ்சிப் பரதேசம் போய் சிவகதி பெற்றவர் ஞானப்பிரகாச முனிவர்.

இவ்விதம் சிவகதி நல்கவல்க தெய்வப் பசுவுக்கும் அதன் குலமான மாடுகளுக்கும் இன்று என்ன நடக்கிறது? கொன்று தின்கிறார்களே. உடல்வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைச் சேர்த்துப் பாழ்படுகிறார்களே. பசுவின் ஊனைத் தின்று தம் ஊனைப் பெருக்குகின்றார்களே.

வள்ளுவரையும் திருக்குறளையும் வானளவாகப் போற்றிப் புகழ்பெறும் கனவான்கள்

**"தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்"**

என்பதை அறியார்களா?

*எல்லாச் சத்தும் நிறைந்த பாலை*
*எல்லார்க்கும் தருவது பசுவன்றோ*

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்ற குறளை ஏன் படித்தார்கள். கொல்லும்போது "என்னைக் கொல்லாதே' என்று கண்ணீர் வடித்து 'அம்மா' எனக் கதறும் அவல ஒலி காதில் விழவில்லையா?

புலால் உண்பவர் புலையர் என்பதை மறந்து யார் யாரையோ புலையரெனப் போலித்தனங்காட்டுவது கொடுமை யல்லவா?

பால்வற்றிய பசுவையும், இளைத்த பசுவையும் இறைச் சிக்கு விற்பது அடுக்குமா?

சைவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொண்டு, தம் நெற்றியில் திருநீற்றைப் பூசிக்கொண்டு மாட்டிறைச்சி உண்ப வர்களே! இக்கொடிய பாவத்திற்கு என்ன பிராயச்சித்தம் செய்யப்போகின்றீர்கள்.

பசுவின் குருதி ஒரு துளி நிலத்தில் வீழினும் அதிலிருந்து பலகோடி அசுரர்கள் தோன்றி உலகைக் கெடுப்பர் என்று நீதிநூல் சொல்வதைக் கேளுங்கள்.

அதை உண்பவர்கள் அரக்கர்களாகி அவர்களால் இந்த உலகம்படும் அவலத்தைக் கண்முன்னால் காண்கிறீர் களல்லவா?

கொன்றவனும், கொடுத்தவனும், தின்றவனும் கொடும் பாவிகளாகி மீளாத்துன்பத்தில் அழுந்துவர் என்பதை உணர்வதெப்போ.

அதிக பால் எடுக்க வேண்டும் என்பதற்காகப் புலால் எச்சங்களை அரைத்து " மாஸ்" எனும் பெயரில் பசுவுக்கு உணவாகக் கொடுப்பதும், புலால் உண்ட பசு தரும் பாலைச் சிவாலயத்திற்குக் கொடுப்பதும் பாவமான செயலல்லவா?

எல்லாத் தேவரும் இருக்கும் திருவுரு
நல்ல பசுவை நாம் தொழுவோமே

சைவச் சான்றோர்களே! பசுக்கொலையைத் தடுத்து நிறுத்தாமல், அதன் பாவத்தை உலகுக்குணர்த்தாமல் இருப்பது அப்பாவத்தின் பங்காளிகளாக்கி விடுமன்றோ.

மாட்டைத் தின்று மக்கள் அரக்கர்களாகும் நிலையை மாற்றி, மாட்டைக் காத்து மக்களைத் தேவர்களாக்கும் மார்க்கம் காட்ட முன்வாருங்கள்.

**சைவப்புலவர் சு. செல்லத்துரை,**

## இடபதானம்

வைதிகர்களும், சைவர்களும் ஏகோதிட்டத்தின் முன் பரமசிவனுக்கு நீல இடபம் விடுதலாகிய இடபோத் சரச்சனம் என்னும் கிரியை செய்க என்று காமிகாகமம் கூறும். மற்றுஞ் சிரார்த்தங்கள் அனைத்தும் செய்தாலும் சிவபெருமானைக் குறித்து இடபம் விடாராயின் பிசாசுருவம் அகலாது.

**சிரார்த்த தீபிகை**

**அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசாமிக்குருக்கள்**

# பசுவின் பெருமை

பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பசுக்கள் வாழ்க என்று பாடியருளியவர். பசு சாதுவான பிராணி. அது பால் சுரந்து எம்மை வளர்ப்பது. பெற்ற தாய் பாலூட்டியபின், பசுவே பால் சுரந்து ஊட்டுவதால் அது கோமாதா, சைவர் பசுவைத் தெய்வமாகப் பூசிப்பர். தமிழ் வீரர் பசுவுக்குத் தீமை உண்டா காமற் போர் செய்வர். பசுக்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொடுப்பதிற் பகை அரசரும் உடன்பாடு தெரிவிப்பர்.

பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் என்னும் ஐந்து பஞ்ச கௌவியம் இவை அபிடேகத்துக்குரிய புனிதமான திரவியங்கள். பசுக் காத்தல் பெரிய அறம். பசு இனத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை , சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமை பெற்றது.

பசுவின் உயர்வு கருதியே சைவசித்தாந்தம் ஆன்மாக் களைப் பசு எனக் கூறுகிறது. பசுக்களுக்குத் தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாமம் பெற்றவர். சைவ சமயத்தின் முதல் நூலாய வேதத்துக்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசுக்களுக்குத் துன்பம் வராமற் காத்தவருள் விசாரசருமர் என்னும் சண்டேசுர நாயனார், ஆனாய நாயனார், திருமூல நாயனார் முதலானோர் மிகப் பெரியவர்கள். சைவநெறியில் விதிக்கப்பெற்ற எண்வகையான ஸ்நாணங்களுள் மாருதஸ்நானம் என்பதும் ஒன்று. அது பசுவின் காலில்பட்ட தூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல் ஆக்கிநேயஸ்நானம் எனப்பெறும். திருக்கோயிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய திருநீறு பூசுதல் பார்த்திபஸ்நானம் என்பதாகும்.

சுபகாரியங்கள் தொடங்கும்போது
பசுவைப் பார்த்தால் நினைத்தது பலிக்கும்.

பசுவை மாடு என்றும், ஆ என்றும் கோ என்றும், தேனு என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயர்களிட்டு அழைத்து மகிழ்வர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பனவெல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள்.

பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி இல்லையாம் என்றும், பசு இல்லாத வீட்டில் லட்சுமி தரித்து இருக்க மாட்டாள் என்றும் , பசு இல்லாத நாடு காட்டுக்குச் சமமாகும் என்றும் பாடுவர்.

**" ஆவிலா மனையகம் அழகு குன்றுமே**
**ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்**
**ஆவிலா மனையகம் அமலை நீக்குவாள்**
**ஆவிலா நாடெல்லாம் அடவி யாகுமே'**

இச் செய்திகளையெல்லாம் ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் சோ. இளமுருகனார் அண்மையில் அழகாகக் கூறியுள்ளார்.

**" ஆவினைப் பிள்ளைபோல் அருத்திப் பேணுவார்**
**ஆவினைப் பெயர்குறித் தழைப்ப ராத்தரு**
**சேவினைச் சிறப்புற வளர்ப்பர் செய்களில்**
**மேவிய பணியெலாம் விரும்பிச் செய்யவே'**

பசுவின் உறுப்புக்களெங்கும் தேவர்கள் முதலான பெரியவர்கள் வதிகின்றார்கள் என்பதால் பசு புண்ணியப் பிறவி என்பதோடு புனிதமானதும் வழிபாட்டிற் குரியதுமாம் என்னும் கருத்தையும் அழகுறப்பாடுவார்.

**"ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்**
**ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்**
**ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற் (று)**
**ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்'**

பசுவின் தலையுச்சியிற் சிவனும், நெற்றியில் சக்தியும், மூக்கு நுனியில் முருகனும், கொம்புகளிற் பிரமாவும், விஷ்ணுவும்

பசுவின் தாகம் தீர்த்தவருக்குப்
பாக்கியலட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

கண்களிற் சூரியனும் சந்திரனும் இன்னும் இன்னும் இதர உறுப்புக்களில் ஏனைய தெய்வ மூர்த்தங்களும் இருப்பர் என்ப.

இங்ஙனமாக எங்கள் வாழ்வில் பசுமைப் புரட்சிக்கான வழியில் உதவியாக நிலவி வரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கு முகமாகத் தைப்பொங்கல் இடுபவராய நாம், அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் புரிந்து, வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம்.

இன்னும் சைவசமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாய வேதத்தில் முதற் பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்தலாகாது என்றும், அது உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி, அனைவருக்கும் அதிதி, பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத் தருவர்.

இனி சாமவேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன. **" நீவிர் புண்ணியமானவர்கள். நீங்கள் நன்றாக வாழுங்கள். நன்றாகப் பாலைப் பொழியுங்கள். காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள புல்வெளி உமக்குப் போதுமானதாகுக. இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக. நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக! வளம் பெருக்குவீராக.**

> **" இன்புடைத் தைமதிப் பிறப்பி லேழ்பரி**
> **வன்புடைத் தேரவற் போற்றி மற்றைநாட்**
> **பொன்பெறு புதல்வரிற் புரியு மாக்களுக் (கு)**
> **அன்பினாற் பொங்கலும் அமையச் செய்வரால் "**

இனிப் பசுவினைக் கொன்று தின்னும் பரதேசிப்பழக்கம் வெளிநாட்டு வனாந்தர வாசிகளாலும், பறங்கியராலும், இங்கே ஒரு காலத்தில் வந்ததென்றும், அது புனிதமான சைவநெறிக்கு ஒவ்வாத செயல் என்றும், அதனை உண்ணல் பாவிகளின் பழக்கமாகுமென்றும் அதனை உணராதவர் தேவராவர் என்றும் பாடுவார்.

*பாவமில்லா உணவூட்டிப்*
*பக்குவமாய்ப் பசுவளர்ப்போம்.*

'ஆவினைக் கொல்லுதல் அவ்வூன் உண்ணுதல்
பாவிகள் தொழிலவை சைவப் பண்பல
மேவிய நிரயத்து வீழ்த்தி மாய்க்குமத்
தீவினை யொழித்தவர் தேவராவரே'

மத்தியகாலச் சிங்கள மக்கள் வரலாற்றில் பசுமாடு பெருமதிப்புப் பெற்றிருந்தது. ஜெயவர்த்தனபுரத்தைத் தலை நகராகக் கொண்டு அரசு வீற்றிருந்த மாமன்னன் ஆறாம் பராக்கிரமபாகு என்பானின் காலத்தில் அரண்மனை வாசலில் காலை வேளைகளில் சாணித் தண்ணீர் தெளிக்கும் தமிழ்க் கலாசாரம் நிலவியது. பசுமாடு புனிதமான பிராணியாகக் கருதப்பெற்று வந்தது. அதனை எவரும் துன்புறுத்தலாகாது என்னும் எழுதாவிதி நிலவியது. அன்றி, பசுமாடு நோய்வாய்ப்பட்டு இறந்தால் அதைப் பக்தியுடன் நிலத்தில் புதைக்கும் வழக்கம் நிலவியது.

சிங்கள மக்கள் என்றாயினும் மாட்டிறைச்சி உண்டதில்லை என்று மஹுவன் (Mahuan) என்பார் 1413 ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பறங்கியர் இலங்கைக் கரை நாடுகளில் செல்வாக்குற்று மாட்டிறைச்சி உண்டு வந்ததைக் கண்ட சிங்கள மக்கள் அப்பறங்கியரை 'அடிமைப் பறங்கியர்' என அழைத்தார்கள் என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எழுதியுள்ளார்கள்.

நன்றி - ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் சரித்திரம்

அபரக் கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்குத் தக்க அளவு உயிரைப் பற்றியுள்ள மலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும் கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும்போது முழுமையாக உயிர் சிவத்தன்மை பெற்றுவிடும். ஆதலால் அபரக்கிரியை இன்றியமை யாதது.

பசுவின் கால் தூசிபடல்
பாவந் தீர்க்கும் மாருதஸ்நானமாம்.

## பசு ஓம்பல்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**

சிவலோகத்திலே சிவனது சந்நிதியில் இடபம் இருக்கும். அதன் பக்கத்திலே நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐவகைப் பசுக்கள் இருக்கும், இவை முறையே, கபிலநிறமும், கருநிறமும், வெண்ணிறமும், புகைநிறமும், செந்நிறமும் உடையனவாம். இவ்வைந்தும், சிவனது திருவருளினாலே திருப்பாற் கடலில் இருந்து சிவபூசையின் பொருட்டும், யாகாதி கருமங்களின் பொருட்டும் பூமியில் உற்பவித்தன. இப்பசுவின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருக்கும்.

இத்துணைச் சிறப்பினவாகிய பசுக்களை இயக்குங்கால், சிறிதும் வருத்தம் செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங் கோலினாலே மெல்ல ஓங்கி போ போ என்று இயக்குக. இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்போர் நரகத்து வீழ்வர். பசுக்களின் பெருமையை உணர்ந்து அவைகளை வலஞ்செய்து, துதித்து வணங்கி, புல்லுக் கொடுத்தோர் சிவலோகத்தை அடைந்து, இன்புறுவர். பசுக்களைத் தீண்டினும் தீவினைகள் நீங்கி, நல்வினைகள் பெருகும். அவைகள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத் தரும்.

பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண், ஓடைமண், புற்றுமண், வில்வத்தடி மண், அரசடி மண் என்பவைகளால் நிலம்படுத்து, முதிர்கன்று, இளங்கன்று, நோயுற்ற கன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைக்க. நாடோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கி, சுத்தி செய்க. மசகம் வராமல் தூபம் இடுக. தீபங்கள் ஏற்றுக. சாலை எங்கும் பூமாலை நாற்றுக. பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லி, மெல்ல புகுவித்து சிரத்தையோடும் புல்லைக் கொடுக்க. நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணுக.

கோயிற் பிரசாதத் திருநீறணிதல்
குற்றம் தீர்க்கும் பார்த்திப ஸ்நானமாம்.

அட்டமி தோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி அன்னமும் ஜலமும் ஊட்டி, தூபதீபம் காட்டி வணங்குக. பசுக்களை வேனிற் காலத்திலே சோலைகளிலும், மழை காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும் இடர் உறாவண்ணம் மேய்க்க, பசுக்களை இடர் நீங்கக் காக்காதவர்களும், பூசை செய்யாதவர்களும் காக்காத பாவிகளைத் தண்டியாத அரசனும். நரகத்தில் வீழ்வார்கள்.

ஆவுரிஞ்சு கல் நாட்டுதலும், சிவனுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத்தானம் செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களை யுடைய இடபத்தைச் சிவசந்நிதிக்குத் தானம் செய்தலும், சிவனது திருப்பணியின் பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கிவளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம் பசுக்கள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் சிவனுக்கு அபிஷேகம் பண்ணுவிக்க. பாலை இரண்டு மாதம் செல்லும் வரையும் கன்று பருகும்படி விட்டு பின் கறந்து சிவனுக்கு அபிஷேகம் பண்ணுவிக்க.

கன்று பால் உண்டு முலையை விடுத்தபோது ஜலத்தினாலே முலையைக் கழுவிக் கறக்க. ஆசை மிகுதி யினாலே கன்றுக்குப் பால் விடாமற் கறந்தவன் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம். வருந்தி, பின்பு பூமியிலே பிறந்து, கடும் பசியினாலே வீடுகள் தோறும் இரப்பன். கபிலையின் பாலைச் சிவனுக்கே கொடுக்க; அதனைத் தாம் பருகில் நரகத்து வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின் எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்கள் அவர்களுக்குப் பரிகாரம் இல்லை.

பசுக்களைப் பகைவர் கவரின், எதிர்த்துக் காக்க; காத்தல் அரிதாய வழித் தம்முயிர் விடுத்தோர் சிவபதம் அடைவர். இது காறும் கூறியவற்றுக்கெல்லாம் பிரமாணம் சிவதரு மோத்தரத்துக் கோபுரவியலின் இறுதியற் காண்க.

நன்றி - பெரியபுராண சூசனம்
சண்டேசுர நாயனார் புராணங்கள்

பசு காத்தவருக்குப் பரகதி கிடைக்கும்
பசுவை ஒறுத்தவர் பாழ் நரகடைவர்.

# பசுகாக்கும் முறை

சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார்

பசுகாத்தலின் பெருமையையும், காவாதொழிதலின் தீமையையும் பற்றி வேதாகமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று போலவே தோத்திரிப்பன. அவற்றைப் பின்பற்றி ஒழுகி நிகழ்ந்து வந்தது நமது புண்ணிய பூமி. ஆனால் இக்காலத்து அவ்வொழுக்கம் மாறிவிட்டது. பசுக்களைக் காத்தலும் காவாதொழிவதும் நிற்க. அவற்றை உண்டிப் பொருட்டாக வதைசெய்யாதிருந்தாலே போதும். அதுவே பெரும் புண்ணி யமாகும் என்று சொல்லும் காலமாக உள்ளது இக்காலக் கொடுமை! அந்தோ! பசுவின் குருதி ஒரு துளி நிலத்தில் வீழ்வதாயின் அதினின்றும் பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை நாசம் செய்வர் என்றும் நூல்கள் கூறுகின்றன. நாடோறும் மிருக மனித வயிற்றை நிரப்பும் பொருட்டு வதைக்கப்படும் பசுக்களின் இரத்தம் ஆறாகப் பெருகுமாயின் இந்நாடு என்ன அலங்கோலம்தான் படாது? இக்கொடிய பாவம் நமது புண்ணிய நாட்டில் வரத் தலைப்பட்ட நாளே நமது நாட்டுக்கு அளவற்ற கேடுகள் வரத்தொடங்கி விட்டன என்பது அறிவோர் துணிபாகும். பசுக்களிடம் கருணையில்லாதவர்களும், பசுக்கொலைபுரிவோரும், பசுவிறைச்சி உண்போரும் ஆகிய புறமதத்தினர் கொலைஞர், புலையர் முதலியோரிடம் பசுக்களையேனும் கன்றுகளையேனும் விற்பது பெரும் பாதகமாகும். விலைக்கு பெற்றவன் செய்யும் பாதகத்துக்கு விற்றவனே பொறுப்பாளியாவான் என்பது நூற்றுணிபும் உண்மையுமாம். நோய்ப்பசு, மூப்புடையபசு, இளைத்த பசு முதலியவற்றை விற்பதும் , அதனால் வரும் சிறு ஊதியத்தைப் பொருளாக எண்ணுவதும் பாவமாகும்; அவற்றையும் பால்வற்றிய பசுக்களையும் உடையவர்கள் தாமே வைத்துக் காப்பாற்றுதல் கடமையாம். தம்மால் இயலாதபோது காக்கக் கூடியவர்களிடம் ஒப்புவித்தலே முறைமையாகும். தனித்தனிப் பசுக்காக்க இயலாதவர்கள் பலர் ஒன்று கூடிப் பசுக்காக்கும் சாலை நியமித்து அதன் மூலம் அவற்றைக் காக்க முயல்வது பெருங்கடமையும் சிவபுண்ணியமுமாகும். ஊர்ப்புறங்களில் பசுக்கள் மேயப் புல் உள்ள நிலம் உண்டாக்கி வைத்தல் புண்ணியமும் , அவ்வாறுள்ள நிலங்களை அபகரித்தல், பெரும் பாவமும் ஆம். மக்கள் இவற்றை அறிந்து திருந்த முயல்வார்களானால் நாட்டுக்கு நலமும் தமக்கு நன்மையையும் தேடிக்கொண்டவராவர்.

நன்றி - சண்டேஸ்வரர் புராண வீளக்கம்.

பசுவுக்கு உணவு கொடுத்திடுவோம்
பாவமகன்றிட இன்புறுவோம்.

# [illegible]கோதனம்

ஸ்ரீமத் முத்துக்குமார [illegible]வாமித் தம்பிரான்

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்..' என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

'ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்..' என்பர் அப்பர்

'யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒருவாயுறை..' என்பர் திருமூலர்.

'தாங்கும் அகில யோகிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவனதுங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாக அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ நம் ஆனினங்கள்...'

'தூய திருமஞ்சனம் ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் நீறு தரு மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம்'

'விடைத்தேவர் குலமன்றோ இச் சுரபிகுலம்"
என்று பசுக்களின் பெருமையைச் சண்டேசுரநாயனார் அவர்கட்குக் கூறியதாகப் பெரியபுராணத்தில் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் கூறுவர்.

"காவலன் காவான் ஆயின் ஆபயன் குன்றும்" என்று திருவள்ளுவரும்,

'ஆன்பயன் இன்றாகும் காவலைவிடுப்பின்' என்று விநாயக புராணத்தும் கூறுவார்.

முன்னாளில் இருபெருவேந்தர் போரிடக் கருதியபோது ஒருவர் மற்றவர் நாட்டில் வாழும் பசு முதலிய தீங்கு செய்யத் தகாதவற்றை அங்கு நின்று அகற்றுவதும், அங்ஙனம் செய்ய முடியாதவிடத்துப் பசுக்களை களவினால் தாம் கவர்ந்து காத்தலும் பண்டைத் தமிழரின் பேரறம். இதனைப் புறநானூறு

பசுவினை உண்போர் பாழ்பட்ட பாவிகள்
பசுவினைக் காப்போர் பார்புகழ் தேவர்கள்

'ஆவும் அனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும், பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாதோரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்'

என முரசறைந்து, இவர்களுக்குத் தீங்குவிளையாதவாறு பாதுகாப்பாக அப்புறப்படுத்திவிட்டே போர் செய்வர் எனக் குறிப்பிடும்.

இத்தகைய கோதனங்களைப் போற்றுதலும், ஆபயன் ஆகிய பஞ்சகௌவியங்களை அரனார்முக்குத் திருமஞ்சனம் ஆட்டுவித்தலும் உயர்ந்த சிவபுண்ணியங்களாம்.

சைவசமயத்தின் கருவூலமான தேவாரத் திருமுறைகளில் பசுவின் பயன் பற்றி மூவர் முதலிகள் பாடிய பதிகங்கள் 'கோதனத் திருமுறை' எனப் போற்றப்படுகின்றன.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

| | |
|---|---|
| "ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்.. | 3ந் திருமுறை |
| "அஞ்சாடு சென்னி அனலாடு கையன்... | 2ந் திருமுறை |
| 'ஆனிடை ஐந்து உகந்து ஆடினானை... | 3ந் திருமுறை |
| 'பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவார்... | 3ந் திருமுறை |
| "ஆனஞ்சாடும்முடி அடிகள் வேடங்களே.... | 3ந் திருமுறை |
| "நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மென்னீரே... | 1ந் திருமுறை |

எனப்பலவாறாகவும்,

## திருநாவுக்கரசு சுவாமிகள்

| | |
|---|---|
| "மாணிபால் கறந்தாட்டி வழிபட நீணுலகெலாம் ஆளக் கொடுத்தவன ... | 5ந் திருமுறை |
| "பாலொடு நெய் தயிர் ஆடிக் கண்டாய்... | 4ந் திருமுறை |
| "ஆனிடை ஐந்தும் வைத்தார்... | 5ந் திருமுறை |
| "ஆனை ஆறென ஆடுகின்றான் முடி .... | 5ந் திருமுறை |
| "நெய்யதாடிய நீலக்குடியரன் ... | 5ந் திருமுறை |
| "கோதனத்தில் ஐந்து ஆடியை .... | 5ந் திருமுறை |
| " ஆடும் ஆனைந்தும் உகப்பாய் போற்றி.. | 6ந் திருமுறை |
| "பாலுநெய் முதலாமிக்க பசுவிலைந்தாடுவானே.. | 4ந் திருமுறை |

எனப்பலவாறாகவும்,

*பட்டிப் பொங்கல் பொங்கும் தமிழர்*
*பட்டி மாட்டைத் தின்னலாமா.*

## சுந்தரமூர்த்திநாயனார்

'கோதனங்களின் பால் கறந்தாட்டி ....' 7ந் திருமுறை

'நெய்யும் பாலும் தயிருங் கொண்டு
நிலத்தில் பூசை செய்யலுற்றார்..' 7 ந் திருமுறை

எனப்பலவாறாகவும் போற்றிப்பாடி வழிபட்டமையைத் திருமுறைகள் எமக்கு அறியத்தருகின்றன.

பசுவின் பயன்களாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவற்றைத் தரும் பசுவைப் போற்றி வழிபடல் - கோபூசை செய்தல் உயர்ந்த சிவபுண்ணியமாம்.

நன்றி - 'கோதனத்திருமுறை'
திருப்பனந்தாள் ஆதீனம்.

இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள்வரை உயிர் இங்கேதான் இருக்கிறது. அதாவது தான்விட்ட உடலின் தொடர்பு நீங்காமல் அருவமாய் இருந்துகொண்டிருக்கும் அந்நிலையில் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யுங் கிரியைகளின் பலனை உயிர் நேரடியாகவே பெறுகின்றது. அந்தியேட்டியின் பிறகு நிகழும் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர் என்னும் தேவசாதியார் ஏற்று உயிர் எங்கிருந்தாலும் அங்கு சேரச் செய்கின்றார்கள்.

பாலைக் குடிக்கும் வாயாலே
பால்தந்த பசுவைத் தின்னலாமா.

## கபில பூசை

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐந்து வகைப்படும். அவைகளுள் நந்தை கபில நிறமும், பத்திரை கரு நிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகை நிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம்.

சிவபூசாந்தரத்தில் பசுவைப் பூசித்தல் வேண்டும். பசுவை அருக்கியசலத்தினால் புரோட்சித்து,

ஓம் கபிலா நந்தாயை நம
ஓம் கபிலா பத்திராயை நம
ஓம் கபிலா சுரபயே நம
ஓம் கபிலா சுசீலயை நம
ஓம் கபிலா சுமனாயை நம

என்று புசித்து அருக்கியங்கொடுத்து , சந்தனம், புஷ்பம், முதலிய வற்றால் அருச்சித்து, அன்னமும் சலமும் ஊட்டி, தூபங் காட்டி, 'நின்மலராகிய சிவபெருமான் ஆன்மாக்களிடத்திற் கொண்ட பெருங்கருணையினாலே அவர்கள் செய்த பாவத்தை நீக்கி மோட்சத்தை அடையும் பொருட்டு தேவர்கள் அமிர்தம் பெற விரும்பி, பாற்கடல் கடைந்த காலத்தில் அக்கடலிற் தோன்றி, ஆன்மாக் களுடைய துன்பத்தைப் போக்கும் பயோதரத்தையுடைய 'மாதாவே, யான் தருகின்ற புல்லை ஏற்றுக் கொள்க' என்னும் கருத்தமைந்த மந்திரத்தைச் சொல்லிப் புல்லை அருத்துக, பின்பு வலமாக வந்து நமஸ்காரம் செய்க.

நன்றி - சிவபூசை விளக்கம்

பசுவைப் பட்டினி கிடக்க விட்டவன்
பாழ் நரகில் வீழ் பாவியாவான்.

மணிமேகலை தரும் செய்தி

## நோவன செய்யன்மின்

தாயினால் கைவிடப்பட்ட குழந்தையொன்று அழும் ஒலியைக் கேட்டு ஒரு பசு அங்கு வந்து சேர்ந்து. அக்குழந்தையின் பசித்துன்பம் நீங்க நாவால் நக்கி தன் பால் ஊட்டி , ஏழு நாள் வரை அக்குழந்தையை விட்டு நீங்காது பாதுகாக்க , பூதியென்னும் அந்தணன் குழந்தையைக் கண்டு எடுத்து **'ஆபுத்திரன்'** எனப்பெயரிட்டு வளர்த்து வந்தான்.

ஒருநாள் யாகத்தில் ஆகுதியாக வெட்டிப்போடுவதற்காக அந்தணர்கள் யாகசாலையில் ஒரு பசுவைக் கட்டிவைத்திருப் பதையும், அப்பசு ஏங்கி அலறுவதையும், ஆபுத்திரன் கண்டான். அப்பசுவுக்கிரங்கி அன்றிரவே அப்பசுவைக் கவர்ந்து காட்டிடைக் கொண்டு சென்றான். பசுவைத் தேடிச் சென்ற அந்தணர்கள் அவனைப் பிடித்து அடித்தனர். அவ்வேளை யாகத்துக்குத் தலைமை தாங்கிய அந்தணனை அப்பசு கொம்பால் குத்திக் கிழித்துக் கொன்றுவிட்டுக் காட்டில் பாய்ந்து விட்டது.

ஆபுத்திரன் அந்தணர்களைப் பார்த்து **'பசுவை வருத் தாதீர்கள்'** நான் சொல்லுவதைக் கேளுங்கள். அரசனால் விடப்பட்ட மேய்ப்புலத்தில் தானாகவேயுண்டாகிய புற்களையுண்டு, நாம் பிறந்த நாள்முதல் சிறப்புடையதாகிய இனிய பாலை , அருள் பொருந்திய உள்ளத்தோடும், அருள்மிகுந்து உண்பிக்கும் பசுவை வருந்தச் செய்யலாமா? இப்பசுவுடன் உமக்குண்டாகிய சினம் யாது? என வினவினார்.

**'நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்**
**விடுதலை மருங்கின் படுபுல்லார்ந்து**
**நெடுநிலை மருங்கின் மக்கட் கெல்லாம்**
**பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்**
**அறத்தகு நெஞ்சோ டருள்சுரந்தூட்டும்**
**இதனொடுவந்த செற்றம் என்ன?'**

நன்றி - மணிமேகலை - ஆபுத்திரன்திறம் அறிவித்தகாதை

**பசுக் கொலையின் கொடுமையினைப்**
**பாரெங்கும் எடுத்துரைப்போம்.**

# இறந்தார் துணை

உறவினர்களுடன் கூடி மகிழும் விதத்தில் விருந்து முதலியன செய்தல் - புண்ணியச் செயலே புரிந்து இலட்சியத்துடன் வாழும் புனிதர்களாகிய முனிவர்கள் - துறவியர் - அந்தணர் போல்வார்க்கு உணவு - உடை முதலிய தேவைகளை ஆர்வத்துடன் நிறைவு செய்யும் வகையில் தான தர்மம் செய்தல் ஏழை எளியவர்கள் - அங்கவீன முற்றவர்களுக்கு உண்டாகும் பசி முதலிய தேவைகளை நீக்க உதவுதல் என்பனவற்றின் ஒரு இல்வாழ்வான் - பொருள் தேடிப் பகிர்ந்து வாழும் பொறுப்புடைய குடும்பகாரன் அக்கறையுடனும் செயற்படவேண்டும். இவற்றில் அக்கறை கொள்ளாது தனக்கும், மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்குமே தன் வருவாயை உபயோகிக்கின்ற - சேமிக்கின்ற பண்பு நாகரீகமான - அறிவினையும் உடைய மனிதப் பண்பு ஆகாது.

ஏழைகள் அங்கவீனர்களுக்கு உதவும் பண்பில் ஒரு பகுதியாக விளங்குவதே இறந்தவர்களைக் குறித்து செயற்படும் சைவசமயக் கிரியைகளின் பிரதான நோக்கமாகும்.

ஒரு உயிரின் செயற்பாட்டுக்கும் அறிவு விளக்கத்துக்கும் பிரதான காரணமான - சிறந்த பொருள் மனித உடம்பாகும்.

உடம்பை இழந்த உயிரின் தன்மைகள் - அசைகள் - தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே அந்தியேட்டி, திவசம் முதலிய கிரியைகளில் பல செயல்கள் உள்ளன. மந்திரபூர்வமாகவும் குறிப்பிட்ட கிரியைகளின் பயனைத்தரச் செய்யும் தகுதியும் இல்லாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் கூட சைவசமய அடிப்படையில் இறந்த உயிர்களின் தேவைகள் ஆசைகள் நிறைவேறி ஈற்றில் நல்லகதி அடையவேண்டும் என்ற ஆசையுடனும், பிரார்த்தனையுடனும் தானதருமம் செய்தல் - சிவசந்நிதியில் நெய்விளக்கேற்றுதல், பசுவுக்கு புல்லும் நீரும் வழங்கல் இறந்த நன்மையை நோக்கமாகக் கொண்டு பஞ்சாட்சர செபம் திருமுறை பாராயணம் புராணபடனம் சிவபுண்ணியங்களைச் செய்தல் என்பன சைவ சமயியாயுள்ள இல்வாழ்வான் ஒவ்வொருவனதும் தலையாயகடமையாகும்.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

உ
சிவமயம்

# அபரக் கிரியைகள் ஒரு தொகுப்பு

உயிர் உடலோடு கூடி வாழும் நிலையில் அதன் நன்மைகருதிச் செய்யப்படும் கிரியைகள் பூர்வக்கிரியைகள். எடுத்த உடலை விட்டு விலகிய பின் அதன் நன்மை குறித்துச் செய்யப்படுங் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப் பெயர் பெறும்.

உயிர் என்றைக்கும் வாழும் ஒரு வஸ்து **(Soul is a living principle)**. அதன் வாழ்க்கை மூன்று நிலைகளில் வைத்து அவதானிக்கப்படுகிறது. அது இவ்வுலகில் உடம்பெடுத்து வாழும் வாழ்க்கை நிலை இம்மை; இவ்வுடல் வீழ்ந்த பின் திரும்பவும் இதுபோல் உடலிற் கூடிவாழும் வாழ்க்கை மறுமை; உடல் வாழ்க்கைக்கான வினைத்தொடர்பு முற்றாக நீங்கி இறைவனடி சேர்ந்து விடுதல் அம்மை எனப்படும்.

மூன்று நிலையிலும் உயிர்க்கு வாழ்வுண்டு. இவற்றில் இம்மை வாழ்க்கைக்கும் மறுமை வாழ்க்கைக்குமிடையில் குறிக்கப்பட்ட அளவு ஒரு இடையீடுண்டு. அந்த இடைக்கால எல்லை குறைந்த பட்சம் ஒரு வருடம் என்பார்கள்.

நம்மவர் யாரேனும் முன்பின் அறியாத ஒரு புதுதேசத்திற் குப் போக நேர்ந்து விட்டால் எமக்குப் பெரும் விசாரமேற்படு கிறது. அங்கு இடந்துறைகள் எப்படியோ? வாழ்க்கை வசதிகள் எப்படியோ? என்ற வகையில் அவ்விசாரங்கள் தோன்றும். அதுபோலவே, நம்மோடு உடனாய் நம்மத்தியில் உடல் கொண்டு வாழ்ந்தவர் ஒருவர் உடலைவிட்டுப் போய்விட்டார் என்றபோது, எங்கே போனார்? அவர் போன இடந்துறை வசதிகள் எப்படியோ? அங்கு அவர் வாழ்க்கைக்கான ஏற்பாடுகள் எப்படியோ? என்ற விசாரங்கள் எழவேண்டியதியல்பேயாம்.

இங்கே வாழுங்காலம் முழுவதும் அவர் அறிவுணர்ச்சியுள்ளவராயிருந்தார். தம் அறிவுணர்ச்சிக்கேற்றபடி உண்ணுதல், பருகுதல் முதலிய பல்வேறு போகங்களை அநுபவிப்பவராயிருந்தார். இங்கே அவர் பெற்றிருந்த உடல் இவ்வெல்லாவற்றையும் அவர் தேடுதற்கும், அநுபவிப்பதற்கும் சிறந்த ஒரு சாதனமாயிருந்தது. இவ்வுடலை விட்டமாத்திரத்தே அவர் அவ்வாய்ப்புக்களை இழந்தவரானார். இனி அவர் மானங்காத்தற்கு; அவர் பசிக்கு, அவர் தாகத்திற்கு என்ன வழி? என்பது ஒரு வகை விசாரம். அநாதையாக அந்தர வழியில் விடப்பட்டிருக்கும் அவருக்குப் படைப்புப் பேதங்களாக உள்ளன என்று சொல்லப்படும் பூத பைசாசங்களால் ஏதும் நிகழ்ந்து விடுமோ என்பதொரு வகை விசாரம். மேல் அவருக்கு வாய்க்க இருக்கும் பிறப்பு நல்ல பிறப்பாக வாய்க்குமோ என்றது ஒருவகை விசாரம். இவ்விடைக்காலத்தில் உளதெனப்படும் நரக வாதனையில் அவர் மிகுதியுந்துன்புற நேருமோ என்றதொரு வகை விசாரம். இங்கிருந்து இறந்துபோன ஒருவரைப்பற்றி இங்குள்ளோருக்கு எழவேண்டிய விசாரங்கள் இவைகளாகும்.

இக்கட்டத்தில் இவர்கள் சம்பந்தமான சேம நலன்களைக் கவனித்தற்கென்று இறைவனாற் படைக்கப்பெற்றுள்ள பிதிரர் என்ற ஒருவகைத் தேவசாதியார் இருக்கின்றார்கள். மரணத்துக்கு முந்திய நிலையில் நம் சேம நலன்களுக்குச் சிறப்பாக உதவும் இந்திரன், வருணன் முதலிய தேவர்களைப் போல, மரணத்தின் பின் நமது சேம நலன்களுக்குச் சிறப்பாக உதவும் பொருட்டாக இருப்பவர்கள் பிதிரர்கள். தேவர்களைப் போலவே பிதிரர்களும் தம்மைக் குறித்து நம்மாற் செய்யப்படும் சத்கிரியைகளினால் தாம் திருப்தியுற்ற பின்னரே தாம் கவனித்தற்குரிய சேமநலன்களைக் கவனிப்பவர்கள் ஆவார்கள்.

இறந்து விட்டவர் அருபியாய் விட்டார். எவ்வகையிலும் நாமாக அவரோடு தொடர்பு கொள்ளல் இயலாது. ஆகவே அதற்குரிய உத்தரவாதமுள்ளவர்களாகிய பிதிர்களை வருந்தியழைத்து நம்முன் இருத்தி அவர்களை நமது பூசை, தானம், தர்ப்பணம் என்பவற்றால் திருப்திப்படுத்தி இறந்தோரின்

சேமநலன் பொருட்டாக நாம் எவற்றையெல்லாஞ் செய்ய விரும்புகிறோமோ அவற்றையெல்லாம் அவர்களைக் கொண்டே செய்வித்தல் தான் அபரக்கிரியைகளின் பொதுநிலைப் பண்பாகும்.

பொதுவாக நம்வாழ்வில் நமக்கு நிகழும் சேமலாபப் பேறுகள் எல்லாவற்றிலும் தேவர், பிதிர்களின் பங்கு முக்கியமானது. அவர்களின் திருப்தி எங்கள் சேமலாபப் பெறுபேறுகளை நன்கமையச் செய்யும்; அவர்களின் வெறுப்பு அவைகளைக் குறைக்கவும் கெடுக்கவும் பார்க்கும். இவ்வுண்மை சமய நிலையில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு ஆஸ்தீக உண்மையாகும். இருவர் சகாயமும் எப்போதும் வேண்டுவன எனினும், மரணத்திற்குப் பின் பிதிரர் சகாயம் பிரத்தியேகமாக வேண்டப்படும் நிலையுண்டு. இதனால், இவ்வாழ்வார்க்கு தேவர் கடனும் பிதிர்கடனும் இன்றையமையாதனவாயின.

உயிர்வாழ்வின் சேமநலப்பேறே கண்ணாகக் கொண்டு நூல் செய்த திருவள்ளுவர் இல்வாழ்வார் கடமைகளைக் குறிப்பிடும்போது,

> **தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
> **ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**

என்றார். இதில் தென்புலத்தாரே முதலிற் குறிக்கப்பட்டிருத்தல் கருதத்தகும். தென்புலத்தார் என்போர் பிதிரர் பிரபஞ்ச வெளியில் தெற்குத்திசை அவர்களுக்கிடமாகக் கருதப்பட்டுள்ளமையால் அவர்கள் தென்புலத்தார் எனப்பட்டனர். இப்பிதிரர்கள் தம்படைப்பமைதியின்படி ஸ்கந்தர், சண்டர், கணாதீசர் எனவும் ஈசர், சதாசிவர், சாந்தா எனவும் மும்மூன்று பேர் இருபகுப்பில் உள்ளனர். சமயதீட்சையாளர்களாய் இறந்தவர்களின் நலத்திற்கு முன்னைய மூவரும், விஷேட தீட்சையாளர்க்குப் முன்னைய மூவரும், விஷேட தீட்சையாளர்க்குப் பின்னைய மூவரும் உதவுவதாகக் கொள்ளப்படும். தனித்தனி இம்மூவர் தொகுதியிற் சேர்ந்தோர் ஒருவருக்கொருவர் விருத்தராய் தந்தை வழி

மரபுத்தொடர்புள்ளவர்களாய் இருப்பார்கள். இறந்த சமய தீட்சையாளர் ஒருவர் சார்பில் பார்க்கும் போது ஸ்கந்தர் என்பவர் அவர் பிதா, சண்டர் பேரன், கணாதீசர் பாட்டன் எனப் பாவிக்கப்படும் நிலையுண்டு. இக்காரணத்தினாலேயே அவர்கள் பிதிரர் எனப்பெயர் பெற்றதுமாம் . பிதிர்கள்- பிதாக்கள்.

சாதாரண வாழ்க்கையில் நம் பிதா, பேரன், பாட்டன் ஆகியோரின் கரிசனையும் தாய், பேர்த்தி, பாட்டி ஆகியோரின் கரிசனையும் நமக்கு உதவுவதற்கு நேரொப்பாக மரணத்தின் பின்னைய வாழ்வில் இவர்களின் கரிசனை நமக்கு உதவுவதாகும்.

'மாதா மனமெரிய வாழாய் ஒருநாளும்'

என்பது உலகநீதி. இந்த மாதா பிதாக்களுக்கு நேரொப்பாக அங்குள்ள பிதிர்களையும் கருதி அவர்கள் மனங்கோணா வகையில் அவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் கடப்பாடு இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அபரக்கிரியைகளின் பொதுநிலைப்பண்பாக உள்ளதொன் றனையும், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுவதன் அவசியத்தையும் இதுவரை கவனித்தோம். இனி அவற்றை ஒழுங்குமுறைப்படி சற்று விரிவாக நோக்குவோம்.

## உத்கிராந்திக்கிரியை

தேகத்தைவிட்டு உயிர் கிளம்புதல் சார்பாக அவ்விறுதிக் கட்டத்திற் செய்யப்படும் கிரியை. உத்கிராந்தி கிளம்பிப் போதல். உயிர்பிரிய இருக்கும் ஒருவர் அகப்புறத் தூய்மையுள்ளவராயும், சிவத்தியானமுள்ளவராயும், தன்னாலியலுமளவு தானதருமஞ் செய்த திருப்தி உள்ளவராயும் இருக்க வேண்டும் என்பது விதி. அந்நிலையிலும் அவருக்குப் போதுமான அளவு அறிவுத் தெளிவும் உடல் வலுவும் இருக்கக் கூடுமானால் அதற்குரிய வற்றை அவரே தாமாகக் செய்யக் கடவர். அது இல்லாத

பட்சத்தில் அவர்க்காக மற்றொருவர் அவற்றினைச் செய்யக் கடவர். இவ்வகையில் விசேடதீட்சையாளர் சார்பில் முறைப்படியான சிவபூசையும், சமயதீட்சையாளர் சார்பில் திருமுறைப் பாராயணத்துடன் சிவமந்திர செபமும் இடம்பெற வேண்டுவனவாம். விபூதி தாரணமும் சிவமூலமந்திர செபமும் எல்லோர்க்கும் இன்றையமையாதனவாகும்.

**சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயே னுன்னை**
**எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என்கண்டாயே.**

- அப்பர் தேவாரம்

**நற்றவாஉனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.**

- சுந்தரர் தேவாரம்

**ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து**
**மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்**
**செய்யுந் திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக்**
**கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.**

- பட்டினத்தார் பாடல்

என இங்ஙனம் திருமுறைகள் இக்கிரியை உண்மைக்கு இடந்தந்துள்ளன. இக்கிரியைப் பண்பே இனிமேல் நிகழவிருக் குங் கிரியைகளின் போக்கை மட்டிடுதற்குஞ் சிறந்த கருவியாய் அமையும். செத்தவர் எப்படியாவது சிவலோகஞ் சேரவேண்டும் என்பதே பொது அபிப்பிராயமும் ஆசையுமாகும்.

## அந்தியேஷ்டி

அந்திய + இஷ்டி, அந்திய காலத்திற் செய்யுங் கிரியை. இஷ்டி - கிரியை. இறந்தவரின் தேகத்திற்குப் பிரேதம் என்ற சொல் பிரேத்தியேகமாக வழங்கும். உடலோடு உயிர் வாழ்ந்த காலத்தில் அவ்விரண்டுக்குமிடையிலிருந்த பிரிக்கமுடியாத செறிவின் முறைமையை ஆதாரமாகக் கொண்டு உடல் விட்டுப் போன உயிரின் நன்மைக்காவனவற்றை இங்கே விடப்பட்ட

அவ்வுடலில் வைத்துச் செய்யுங் கிரியைகள் அந்தியேஷ்டி எனப்படும். இதன் விரிவுகளைக் கவனிக்குமுன் இது சம்பந்தமான மற்றொன்று இங்கு இடம்பெற வேண்டியுள்ளது.

## சாதாரணமான நம்மவர்க்கு

அந்தியேஷ்டிக் கிரியை செய்யப்படுவதில் அவரவருடைய சமயாசார ஒழுக்கநிலை பிரதானம் பெறும். நிலைவேறுபாடு பலதரமாயிருக்குமாயினும் ஒரு பரவல் நோக்கில் வைத்து அது இருவகையில் அடக்கப்படுகிறது. விசேட தீட்சை, நிருவாணதீட்சை, ஆசாரிய அபிஷேகம் என்பவற்றில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டாவது பெற்றுள்ளவர்களின் நிலை ஒருவகை சமயதீட்சை மாத்திரம் பெற்றுள்ளவர்களின் நிலை ஒருவகை. முந்திய வகையினர்க்கு அவர் பிரேதத்தின் சார்பாக நடைபெறவேண்டுங் கிரியைகள் அனைத்தும் ஒரே தொடர்பாக அவர் இறந்த அதேநாளில் நடந்து முடியும். அவர் இல்லத்தில் பிரேத சுத்திக்கான சாதாரண கிரியையும், மயானத்தில் அவருடைய அத்துவாக்களைச் சோதனை செய்து அவருக்கு நேரடியான ஆத்ம சுத்தி வருவித்தற்குரிய விசேட நிர்வாணக் கிரியையும் நடைபெற்று அவர் சிவாக்கினியில் தகிக்கப்பட்டுச் சிவமாவார். இவ் வெல்லாக் கிரியைகளும் ஒரே கூட்டாக அந்தியேஷ்டி என்ற பெயரில் அடங்குவன.

சமய தீட்சை மட்டுமுடைய சாதாரணமானவர்க்குப் பொதுவாகச் சமயாசாரத்தரம் குறைவாயிருப்பதாலும், இவர்களிற் பெரும்பாலார் சமயாசாரா ரீதியாக விலக்கப்பட்ட சில காரியங்களையும் (மது மாமிசாதி) தழுவுஞ் சுபாவமுடையா ராயிருப்பதாலும், அவர்களுக்கு இவ்வந்தியேஷ்டிக் கிரியையாகிய ஒரே கிரியை இரண்டு கூறாக்கப்பட்டு இறந்த அன்று நடப்பது சவக்கிரியை எனவும். பின்பு முப்பத்தோராம் நாள் நடப்பது. அந்தியேஷ்டிக் கிரியை எனவும் நடைமுறையில் இருந்து வருகின்றது. எந்தக் கிரியையும் விடப்பட்ட தேகத்தில் வைத்தே எவர்க்கும் நிகழவேண்டியது . ஆனால் நம்மவர் தகுதிக் குறைவு, குறைந்த பட்சம் முப்பதுநாட் காலக்கழிவு

வேண்டிநிற்கின்றது. அதுவரை பிரேத தேகத்தை வைத்திருக்க முடியாமையால் சவக்கிரியையோடு அதைத் தகித்துவிட்டு, பிறகு 31ம் நாள் **'புத்தலிகா'** என்ற ஒரு தேகம் தர்ப்பையினால் புதுவதாகப் படைத்து, அதுவே இறந்தவரின் சொந்தத் தேகமாகப் பாவித்து அந்தியேஷ்டி என்பதற்குரியன வெல்லாஞ் செய்து மடித்து முடிவில் அப் **'புத்தலிகாவையும் தகித்து விடும்'** வழக்கம் நம்மவர்க்கிருத்தலின் தாற்பரியம் இதுவேயாகும்.

## இவ்விளக்கத்தின் பிரகாரம்,

| | அவர்களுக்கு | நம்மவர்க்கு |
|---|---|---|
| 1. | ஒரே சூர்ணோற்சவம் | இரு சூர்ணோற்சவம் |
| 2. | ஒரே தகனம். | இரு தகனம். |
| 3. | ஒரே அஸ்திசஞ்சயனம் (சாம்பலள்ளல்) | இரு அஸ்திசஞ்சயனம் |
| 4. | ஒரே நாட்கிரியை | இரு நாட்கிரியை. |
| 5. | பத்துநாள் ஆசௌசம். | முப்பது நாள் ஆசௌசம் |
| 6. | சிராத்தக் கிரியைகள் பத்துநாளில் நாளாவட்டம் ஒன்றிரண்டு. | சிராத்தக் கிரியைகள் எல்லாம் ஒருமித்து முப்பத்தோராம் நாளில் |
| 7. | ஒரே பிரேதசுத்தி | இரு பிரேதசுத்தி. |

நடைபெற வேண்டியிருக்கும் வேறுபாடு தெரிகிறது. சமய தீட்சை மட்டுமுள்ளவர்களிலும் முறையான சமய ஆசார சுத்தமுள்ளவர்கள் தொடர்பான ஒரேநாள் அந்தியேஷ்டிக் கிரியை பெறத் தகுதியுடையோர் ஆகலாம். ஆனால் அவர்களும் பந்துமித்திரத் தொடர்பு காரணமாக மது மாமிசமுள்ளாரோடும் பந்தி போசனங் கொள்பவராயிருக்க வேண்டுதலின் அவ்வாய்ப்பை இழக்கின்றனர் . பந்துமித்திரர் எல்லோரும் ஒரே வகையான சுத்த போசனிகளாகுஞ் சைவர்களாய் இருக்கும் காலத்தில், இவ்வேறுபாடுகள் இல்லாதொழியலாம் என நம்புதற்கிடமுண்டு.

இனி, இக்கிரியை சம்பந்தமான விரிவுகளைக் கவனிக்கலாம்.

ஒருவர் இறந்ததும் உடனடியாக அவர்க்கு நிகழ வேண்டுவது பிரேத சுத்தியாகும். ஒன்றாயிருந்த உடலும் உயிரும் தம்மிற் பிரிந்தமைபற்றி இரண்டும் தனித்தனி தோஷமடைந்துள்ளன என்பதே கொள்கை. அதனை முன்னிட்டுப் பிரேதசுத்தி நிகழும். சீவதீட்சை, சிவாலய வழிபாடு, சிவத்தியானம் , சந்தியாவந்தனக்கிரமம் என்பவற்றைக் கைக் கொண்டொழுகிய ஒருவருக்குச் சிவகும்ப தீர்த்தத்தினாலேயே பிரேத சுத்தி நிகழ வேண்டும். அதன் பொருட்டு இறந்தவர் இல்லத்து முற்றத்திற் பந்தலிட்டுச் சிவகும்ப பூசை நிகழும். நடுவிற் சிவகும்பமும், சுற்றிவர எட்டுத்திக்கிலும் திக்பாலகர் கும்பங்களும் தாபித்துச் சிவாக்கினி வளர்த்துச் சிவகும்பபூசை நிகழும்.

## சூர்ணோற்சவம் சுண்ணமிடித்தல்

ஸ்நானத் தூய்மைக்குச் சுண்ணம் இன்றியமையாதது. அறுகும் மஞ்சளுமிட்டு இடித்தெடுக்குஞ் சுண்ணம் பொற் சுண்ணமாகும். இப்பொற்சுண்ணம் தயாரிக்கும் நிகழ்ச்சி ஆலயங்களில் தீர்த்தோற்சவத்திலன்று சுவாமி பேரிலும் நடைபெறுவதாகும். அதற்கன்றே அமைந்திருக்கின்றது திருவாசகத்தில் திருப்பொற்சுண்ணம் என்ற பகுதி கோயில் சூர்ணோற்சவத்தில் அது படிக்கப்படுவது போல, இங்கும் அது படிக்கப்படும். ஆனால் சுவாமிக்குப் பொற்சுண்ணஞ் சாத்திய பின்பே தீர்த்தமாட்டல் நடைபெறும் . எங்களுக்குச் சிவகும்ப தீர்த்தமாட்டிய பின்பே பொற்சுண்ணஞ் சாத்தி மீளவும் நீராட்டும் பாவனையில் கும்பநீர் தெளிக்கப்படுதல் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. எங்களிலும் விசேட தீட்சை, நிர்வாணதீட்சை, ஆசாரிய அபிஷேகம் உடையோருக்குச் சுண்ணஞ் சாத்திய பின் நீராட்டும் வழக்கமே உண்டு. சிவகும்பத்தினால் நீராட்டுமுன் , சாதாரண சமயதீட்சையாளர்களாகிய நமக்குச் பொற்சுண்ணஞ் சாத்துவதற்கேற்ற அளவு தூய்மையில்லை என்ற விளக்கத் தினால் தான் இவ்வேறுபாடு காட்டப்படுகிறதாயிருக்க வேண்டும்.

இவ்விஷயத்தில், சுவாமிக்கு செய்வதுபோலப் பிரேதத் திற்குஞ் செய்யலாமோ? செய்தாலும் சுவாமி சூர்ணோற்சவம் சொல்லப்படவில்லை என்பது ஒரு சாட்டாகாது. சைவபூஷணம் என்ற நூலில் , அபரக்கிரியையில் பேரீதாடனம் (மேளத்தில் தட்டுதல்) என்ற கிரியை மிக விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அகோர சிவாச்சாரியார் பத்ததியில் பேரீதாடனம் இரண்டும் அபரக்கிரியா விதியிற் கூறப்பட்டுள்ளன. வழக்கத்தில் பேரீதாடனம் சூர்ணோற்சவக் கிரியைக்கு முன்னோடியாக உள்ளதொன்றே. ஆதலால் சூர்ணோற்சவம் அபரக்கிரியைக்கும் உள்ளதேயாம்.

இனி, கிரியாகிரம ஜோதிகை என்னும் அகோர சிவாச்சாரிய பத்ததியில் அபரக்கிரியைக்கு சூர்ணோற்சவவிதி சொல்லு கையில் **'உலூகளே ஓம்ஹாம பருதிவயை நம'; 'முசலே ஓம்ஹாம் மஹா மேரு பாவதாய நம'** என்ற மந்திரம் பிரயோகிக்கப் பட்டுள்ளது. இம்மந்திரம் **'வையகமெல்லாம் உரலதாக, மாமேரு வென்னும் உலக்கை நாட்டி'** என வரும் திருப்பொற்சுண்ணப் பாடலின் பொருளையே கொண்டுள்ளது. மேலும் தொடர்ந்து அம்மந்திரத்தில் **'ஹரித்தரா சூர்ணீ குர்யாத்'** என வரும் பகுதி குறித்த அதே பாடலில், **'மெய்யெனு மஞ்சள் நிறைய அட்டி............ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே'** என வரும் பகுதியின் பொருளே பொருளாகக் கொண்டுள்ளது. இத்தன்மையால், **திருப்பொற்சுண்ணம் படிக்க** என நேரடியாக விதி சொல்லப்படாவிடினும் திருப்பொற்சுண்ணம் படித்தல் அபரக் கிரியா பத்ததிக்குச் சம்மதமேயாதல் தெளியப்படும்.

இனி சுவாமிக்கு முன் படிப்பதைத் சவத்தின்முன் படிப்பதா? எனக் கிலேசிப்பதிலும் அர்த்தமில்லை . சுவாமி பூசைக்குதவும் சிவமந்திரங்களைச் சவக்கிரியைகளிலும் உபயோகிக்கப் பத்ததிகள் விதித்துள்ளதனாலும் , சுவாமி தோத்திரமாகிய தேவாரங்கள் சவக்கிரியைக்கும் அனுமதிக்கப்பட்டிருத்தனாலும் , திருப்பொற்சுண்ணப் பாடல்களும் அதில் இடம்பெற அனுமதிக்கப்படுதலில் ஒருவித தவறுமில்லையாகும். அன்றியும்,

அப்பாடல்கள் தரும் சாந்தமான இசையின்பமும், உள்ளக்கி ளர்ச்சியும் அக்கிரியையிற் சம்பந்தப்படும் அனைவர்க்கும் புனர்வாழ்வளிப்பது போலாகும். புதுமையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும் அப்பாடற் பொருளாக அமையும் சிவலோகக் காட்சிகளும் அங்குள்ளார் உரையாடல்களும், ஆரவாரங்களும் இறந்த சீவன் சிவலோகமே சேர்ந்துவிட்டது என்ற தெம்பை, அதைப்பிரிந்து கவலையுறுவார்க்குத் தரும் அற்புதத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டும் . அத்தெம்பு தற்காலிகமாயினுங் கூட அந்த அவசரத்தில் அதன் தரம் சொல்லொணா மகிமை வாய்ந்ததாம். இவ்வாற்றால் சவக்கிரியைகளில் திருப்பொற்சுண்ணப் பாடல்களின் சேவை மிகப் பெரிதென்றே கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் சிவகும்பதீர்த்த ஸ்நானமும் பொற்சுண்ணஞ் சாத்திக் கும்பநீர் தெளித்தலும் பிரேத சுத்திக்கிரியையின் பிரதான அம்சங்களாம் . இத்தொடர்பில் நிகழும் எண்ணெய் அரப்பு முதலிய திரவிய ஸ்நானமும், பிரேதத்துக்கு வீபூதி தரித்தலும் பிரசித்தமானவை. இவ்வகையிற் சுத்தி செய்யப்படும் பிரேதம் பாடையில் ஏற்றி மயானங் கொண்டு செல்லப்படுதல் விதியாகும். பச்சை மரம் தறித்துப் பாடைகட்டுதல் முறை என்றும் அம்மரமும் யாகத்திற்குரிய மரமாயிருந்தால் விசேடமென்றுங் கொள்வர் . இப்படியாக எடுத்துச் செல்லப்பட்டு மயானத்தில் பிரேத தகனஞ் செய்யுமளவும் சமய தீட்சை மட்டுமுள்ள சாதாரணர்களாகிய எங்களுக்கு முதல் நாட்கிரியையாகும். விசேடதீட்சை முதலாயின உடையார்க்கு மயானத்தில் வைத்து விசேட அந்தியேஷ்டியோ நிர்வாண அந்தியேஷ்டியோ முடிந்த பின்பே தகனம் நிகழும்.

## அஸ்தி சஞ்சயனம் சாம்பலள்ளல் - காடாற்றுதல்

தகிக்கப்பட்டவரின் எலும்பையும். சாம்பலையும் முறையான சமஸ்காரங்களுடன் எடுத்துப் புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்தல் இதன் பண்பாகும். தகிக்கப்பட்டவர் எலும்பு மேனியில் முழு உருவமாக இருக்கின்றார் என்ற பாவனையோடு முன் பிரேத

ஸ்நானஞ் செய்தவாறே அங்கும் அவருக்கு ஸ்நானஞ் செய்து சிவமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு முறையே முழந்தாள், மார்பு நெற்றி சிரசு என்ற இடங்களின் எலும்புகள் பிரதானமாக எடுக்கப்படும். அவ்விடத்தை ஆக்கிரமித்திருக்கக்கூடிய பூத பைசாசங்களின் திருப்திப் பொருட்டு பழம், ரொட்டி, இளநீர் முதலிய பொருட்கள் பலியாக இடப்படும். அவரைத் தீயிட்டுத் தகித்தமை பற்றிய தோஷத்துக்கு இது சாந்தியாகவும் அமையும். இதற்காக நிலமும் தகிக்கப்பட்டதற்குச் சாந்தியாக இனி, ஒருகால் நிலங்குளிர்வித்து நவதானியம் விதைக்கப்படும். விதைக்கப்பட்ட தானியங்கள் முளை கொண்டு செழிக்கு மளவிற்கு நிலங் குளிர வேண்டும் என்பது விதி. இக்கிரியைக்குக் காடாற்றுதல் என்ற பெயர் வழங்க வந்தது. இதனாலேயாம். பிரேத சரீரத்தோடு உயிர்க்கிருந்த தொடர்பு பற்றிச் சரீரத்தில் வைத்துச் செய்தவற்றின் பலன் உயிர்க்காயது போல எலும்பில் வைத்துச் செய்வனவும் உயிர்க்கேயாம் என்ற விளக்கம். அவசியமானது. பெரியபுராணத்துப் பூம்பாவை வரலாற்றில் வைத்து இவ்வுண்மை விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.

## எட்டாம் நாட்கிரியை (எட்டு)

தகனத்திற்கு முன்பே அந்தியேஷ்டி நிகழப்பெறாத சாதாரணர்கள் சார்பில் நடைபெறுங்கிரியை இதுவாகும். இப்பெயரில் இது பத்ததிகளிற் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால் அவற்றில் வரும் பிரபூதபலி என்ற கிரியைக்குச் சமனாக இது இடம்பெறுதல் காணலாம். நம்மவர்க்குள் இது பிரபல்யமாயிருப்பதால் இதை விசாரித்தல் தகும்.

அந்தியேஷ்டி செய்து பிரேததகனம் முடித்துக் கொண்டவர் சார்பில் அன்றே அவர் இறந்த இடத்தில் சிவகும்பந்தாபித்துப் பூசித்து அதன் அயலில் கல் அல்லது செங்கல் அமைத்து அதில் இறந்தவரின் உயிர் சாந்தித்தியமாய் இருப்பதாகக் கண்டு தினசரி காலை மாலை ஜலம், அன்னம், இளநீர் ஆகியன வைத்துத் தூபதீபசகிதம் பூசித்துவர வேண்டும். இதன் ஆரம்பத்திற்குப் பர்ஷாணத்தாபனம் என்று பெயர்.

இப்பாஷாணபூசை 10 நாள் தொடர்ந்து நடைபெற்றுப் பத்தாம் நாள் பாஷாணம் உரிய சம்பிரதாயப்படி விசேஷ அலங்கார வைபவங்களுடன் எடுத்துச் செல்லப்பட்டுத் தீர்த்தத்தில் இடப்படும். இது **பாஷாண உத்தாபனம்** எனப்படும். கல்லெடுப்பு என வழங்கப்படுவது இந்நிகழ்ச்சியே. இக்கல் லெடுப்பு நேரத்துக்கு முன் அப்பாஷாணத்தின் முன்னிலை யில் உணவுப் பண்டங்கள் சகலதும் பெருமளவிற் படைத் துத் தூபதீப நைவேத்திய உபசாரங்களுடன் கூடிய விசேடபூசை நடைபெறும். இப்பூசைக்குப் **பிரபூதபலி என்று** பெயர். பத்ததிகளிலுள்ளபடி இக்கிரியையின் வரலாறு இதுவாகும்.

சாதாரணர்களாகிய நம்மவர்க்கு உடனடியாக அந்தி யேஷ்டி முடியாக் குறையினாலே மேற்காட்டியவாறு இக்கிரியை செய்யும் வாய்ப்பில்லையாயிற்று. அதனால் எமக்குப் **பாஷாணஸ்தாபனம், உத்தாபனம்** இரண்டும் அந்தியேஷ்டியில் சுட்டபின் சீக்கிரமாக முடிக்கும் ஒரு சிறு கிரியையாகப் பின் போடப்பட்டுள்ளது. இதனை நோக்கி, இதற்கொரு மாற்று வழியாம் பாங்கில், எங்கள் இல்லங்களிலும் இறந்தவர் கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் நீர்க்கலசமும் **இளநீரும் வைத்து அழுதுந் தொழுதும் வணங்கும்** வழக்கமும் எட்டாம் நாள் உண்பனவும், தின்பனவும், பருகுவனவுமான பண்டங்களைப் பெருமளவில் தயாரித்துப் படைத்துக் கற்பூரங் கொளுத்திப் பூசிக்கும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாற்றால் எங்கள் சார்பில் நிகழும் **'எட்டு'** வைபவம் அபரக்கிரியா விதியிற் காணும் பிரபூதபலியின் பிரதியேயாம். பலி என்ற கருத்திற்கிணங்க அன்று படைத்த வற்றில் ஒரு பகுதியைப் பேயும் பிசாசும் ராட்சசருங்கூட அனுபவிக்குமாறு சந்தியிற் கொண்டு சென்று கழித்துவிடும் வழக்கமுமிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

## அந்தியேஷ்டி

நிர்வாண அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, சமய அந்தியேஷ்டி என அந்தியேஷ்டியில் மூன்று வகையுண்டு.

முன்னைய இரண்டும் உயர்தீட்சையாளர்க்குரியவை. சமய அந்தியேஷ்டியே சாதாரண சமயதீட்சையாளர்க்குரியது. இவர்களுக்குரிய சாமானிய மண்டபக் கிரியைகள் அவர்களுக்கு முரியவை. அவர்களுக்குரிய அத்துவசோதனை கலாசுத்தி காரியங்கள் எங்களுக்கில்லை. எங்களுக்குத் தத்துபூசை மட்டுமே உண்டு. சம்பந்தப்பட்ட உயிரானது அபரக்கிரியை யின் இறுதியாக வருஞ் சபீண்டீகரணம் என்னுங் கிரியையின் பின், தன்தகுதிக்கேற்ற அளவு சிவகதியில் மேல்நிலை அடைதற்காகவும், தன்வாழ்நாளில் அதுசெய்து வந்த சமயக் கிரியைகளில் அவ்வவ்போது ஏற்படக்கூடியதாயிருந்த குறை களை நிறைவாக்குவதற்காகவும் இச்சமய அந்தியேஷ்டி செய்யப்படுகின்றது. இதற்கேற்றவாறு இவ்வந்தியேஷ்டியில் சக்திகும்பபூசை, பஞ்சகவ்யபூசை, தத்துவபூசை, திக்பாலர் பூசை, சிதாவாஸ்துபூசை, சிவாக்கினிகாரியம், சிவகும்பூசை என்பன நடைபெறும். இக்கிரியைகளின் ஒழுங்கில் அவ்வுயிர் மேல்கதியடைதற்கு ஏதுவான தகுதிப்பாட்டை வருவித்ததற் காக வேண்டுவனவெல்லாம் மந்திரக்கிரியா ரூபமாகச் செய்து, முடிவில் அதனைச் சிவாக்கினியிற் சேர்த்து, அவ்வகையால் சிவனிடத்திற் சேர்த்து விடுதலாகிய நடைமுறைக்கிரமம் அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. இவற்றில் விசேட முக்கியத்துவமுள்ள அம்சங்களைக் கவனித்தல் பயனுடையதாகும்.

## சிதாவாஸ்து பூசை

'சிதா' என்பது பிரேதத்தைத் தகிக்கும் விறகுப்படுக்கை. வாஸ்து. என்பது தகனத்துக்குத் தெரியப்பட்ட இடம். அந்தியேஷ்டி மண்டபத்தில் தென்கிழக்குப் பாகம் இதற்கென ஒதுக்கப்படும்.

இந்த அந்தியேஷ்டிக் கிரியைகள் உண்மையான பிரேதத்திலும் அதன் முன்னிலையிலுமே நடைபெற்றன என்பதை முன்னே கண்டோம். சமயதீட்சை மட்டுமுடை யார்க்கு முப்பது நாள் முன்பாகவே தகனம் முடிந்து

விட்டமையால், இப்பொழுது அப்பிரேத சரீரத்துக்குப் பிரதியாக மற்றொன்று வேண்டும். அதற்காகவே சிதாவாஸ்து பூசையில் **'புத்தலிகா'** என்ற பொருள் இடம் பெறுகின்றது. புத்தலிகா என்பது இறந்தவரின் சரீரத்துக்குப் பிரதியாகத் தர்ப்பையினாற் சமைக்கப்படும் பிரதி சரீரமாகும். அதை, முன் பிரேதசுத்திப் பொருட்டுச் செய்தனவெல்லாஞ் செய்து, ஒரு சிறு பாடையிற் கிடத்தி விறகுப் படுக்கையில் வைத்துக் கொண்டே சிதாவாஸ்துபூசை செய்யப்படும். விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டியாளர்களை மயானத்தில் கொண்டு சென்று அந்தியேஷ்டி செய்யும் வழக்கம் இதனால் ஏற்பட்டதேயாம். இச்சிதா வாஸ்து கிரியை, சமய தீட்சையாளர்க்கு இறந்த நாளில் நடந்த கிரியையின் தொடர்ச்சியேயாதலின் அங்கு நடைபெற்ற சூர்ணோற்சவத்தை முதற்செய்தே இங்கும் தொடங்கும். பிரேத சரீரத்தில் அன்று செய்த கிரியைக்கும் புத்தலிகாவில் இங்கு நடக்கும் கிரியைக்குமிடையில் வேறுபாடுண்டு. அங்கு சிவகும்ப தீர்த்தத்தினால் ஸ்நானஞ் செய்விக்கப்பட்டுச் சிவாக்கினியினால் தகிக்கப்பட்ட அளவே நடைபெற்றது. (இங்கு புத்தலிகாவில்) சிவாக்கினியின் சிவத்துவப்பிரகாசம் நாடீசந்தான மூலம் ஏற்றப்படுதல் உண்டு. அதனால் அன்று நிகழ்ந்த பிரேதசுத்தியை விட இது பிரபாவம் மிக்கதாகின்றது. இனி, இறந்துபோன உயிரைச் சிவாக்கினியிற் சேர்த்தலும், பின் சிவத்தில் சேர்த்தலும் அங்கில்லை. இங்கு தான் இடம்பெறும்.

## தத்துவபூசை

அந்தியேஷ்டி மண்டபத்தில் தென்கீழ்த்திசையில் சிதாவாஸ்துவுக்குப் பக்கத்தில் இருபத்தைந்து அறைகள் உண்டாக ஒரு ஸ்தண்டிலமிட்டு, அவற்றில் ஐந்துநிறப் பொடிகள் பரப்படும். இந்நிறங்கள் ஐம்பூதங்களைக் குறிப் பனவாகும். ஒவ்வோர் பூதப்பகுதியிலும், அவ்வப் பூதத்தைச் சார்ந்த கலைகளும், அவ்வற்றின் அதிதெய்வங்களும் பூசிக்கப்படும். தத்துவவிளக்க அட்டவணையில் இது பின்வருமாறு அமையும்.

| பொடி | பூதம் | கலை | அதிதெய்வம் |
| --- | --- | --- | --- |
| மஞ்சட்பொடி | பிருதிவி(மண்) | நிவிர்த்திகலை | பிரமா |
| பச்சைப்பொடி | அப்பு (நீர்) | பிரதிஸ்டாகலை | விஷ்ணு |
| சிவப்புப்பொடி | தேயு(தீ) | வித்தியாகலை | ருத்திரன் |
| கறுப்புப்பொடி | வாயு(வளி) | சாந்திகலை | மகேஸ்வரன் |
| வெண்பொடி | ஆகாயம்(வெளி) | சாந்தியதீதகலை | சதாசிவன். |

இத்தத்துவ பூசையின் தாற்பரியமாவது சம்பந்தப்பட்ட உயிரின் தத்துவ விரிவு இயலுமளவு ஒடுக்கப்பட்டுவிட்டது. இனி அதுதன் தகுதிக்கேற்பச் சிவத்துவச் சார்பில் தனக்கேற்குமளவுக்கு உயர்கதி பெறலாம் என்பதே.

இவ்விவ்வகையில் அந்தியேஷ்டிக் கிரியைகள் நடந்து இறுதிக் கட்டத்தில் புத்தலிகா தகனஞ் செய்யப்படும். இதுவே முன் ஓரிடத்தில் எங்களுக்கு இருதகனம் எனக் குறிப்பிடப்பட்டதாம். அந்தியேஷ்டியைக் குறிப்பிடுகையில் **'தருப்பை சுடுதல்'** எனச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ளல் பெரும்பான்மை.

இவையெல்லாம் முடிந்த பின்பே எமக்குப் பாஷாண ஸ்தாபனமும், இறுதி நாளாய் விட்டபடியால், கையோடே பாஷாண உத்தாபனமும் நடைபெறும்.

இதுவரை விபரிக்கப்பட்ட இவ்வளவும் அபரக்கிரியை களில், பிரேதசரீரம் சம்பந்தப்பட்ட வரையில், அதனை முன்னிலையாகக் கொண்டு நிகழ்ந்தனவாகும். இனி இவற்றின் தொடர்பாக நடைபெறுவன எல்லாம் நாம் முன் கவனித்தவாறு இறந்துபோன உயிரின் பிரேதத்தன்மை நீக்கி அது பிதிரர்களின் சகாயத்தால் தன் தேவைகள் நிரம்பப்பெற்று மேல்கதியிற் செல்லுமாறு கருதிச் செய்யப்படுவனவாம்.

அக்கிரியைகள் நக்னதானம் முதல் சபிண்டீகரணம் இறுதியாகப் பலவாகும். சபிண்டீகரணமும் முடிந்தபின்பே அதற்கு மேல்கதிப் பேறென்பது ஆகமக்கொள்கை.

இப்பகுதிக் கிரியைகள் அனைத்தும் பொதுவில் சிராத்தம் எனப்படும். இறந்தவர் ஒருவரின் ஈடேற்றத்தை இங்கிருப்பவர்கள் பெரும் விஷயமாகக் கருதி இயன்ற அளவு கூடுதலான சிரத்தையுடன் இவற்றைச் செய்தல் வேண்டும் என்பது இப்பெயர்ப் பொருள் தரும் விளக்கமாம். சிராத்தம் - சிரத்தையுடன் செய்யப்படுவது என்பர். முன் ஆரம்பத்திற் காட்டியவாறு பிதிரர்களே இச்சிராத்தக் கிரியைகளில் மிகுதியாக இடம்பெறுவர். தானங்களும் மிகுதியாக இடம்பெறும். இன்றைய நம் வழங்குமுறையில் இவையனைத்தும் வீட்டுக்கிரியைகள் என்ற பெயரில் அடங்கும்.

எங்கள் வீட்டுக் கிரியைகளில் புரோகிதர்கள் இடம்பெறுவார்கள். புரோகிதர்களாகிய ஐயர்மாரை அழைத்து அவர்கள் மூலமாகவே எல்லாக்கிரியைகளும் நடைபெறுதல் பிரசித்தம். இவ்வெல்லாக் கிரியைகளிலும் புரோகிதர்களிடத்தில் பிதிரர்கள் ஆவாஹனஞ் செய்யப்படுதல் ஒரு சிறப்பம் சமாயிருக்கும். அவர்கள் அப்போதைக்குத் தாம் பிதிரர்கள் என்ற பாவனையுடனிருந்து நாம் வழங்கும் தானங்களை ஏற்றுத் திருப்தியடைந்து, அவ்வகையால், இறந்தோர்களுக்கு உதவ இருப்பவர்களாகிய மூலப்பிதிரர்கள் திருப்தியடையும் நிலையை உருவாக்குகிறார்கள். சிராத்தக் கிரியைகள் எல்லாவற்றிலும் அவற்றை நடத்துவிக்குங் கர்த்தா திருப்தியோ என வினவுதலும் அவற்றை நடத்தும் புரோகிதர்கள் திருப்தி என்று சொல்லிக் கொள்ளுதலும் நிகழ்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சிராத்தக் கிரியைகளில் ஏகோதிஷ்டம் மட்டும் பிதிர் ஆவாஹனத்திற்கு விலக்காகும். அக்கிரியையில் அமரும் புரோகிதரில் இறந்ததாகிய பிரேதத்துவ சம்பந்தமான உயிரே ஆவாகிக்கப்படுகிறது. அதன் பிரேதத்துவம் முற்றாக அகலுதற்கு உபகாரமாக, ஏகோத்திட்டத்தில் அமரும் புரோகிதருக்கு எல்லாவகையிலும் கூடுதலான

தரமும், தொகையுமான பொருள்கள் பெருமளவிற் தானஞ் செய்யப்படும். இந்த ஏகோத்திட்டத்தை ஏற்பவர் இது காரணமாக ஒரு வருஷகால ஆசௌசமுடையராயிருப்பர் எனவும் அக்காலத்தில் அவர் சமயக்கிரியைகள் எதிலும் பங்குபற்றுதற்கு அருகதையற்றவராவர் எனவும், அவர் புண்ணிய தீர்த்த யாத்திரை பண்ணுதல் மூலமாகவே அவருடைய ஆசௌச தோஷம் சரியாக நிவிர்த்தியாகும் என்றும் கொள்ளப்படும். அங்ஙனமாதலால் இதை நடத்து விக்குங் கருத்தா தமது சக்திக்கு இயலுமான அளவு முயன்று அவர்க்கு ஆகவேண்டிய சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர் ஆகிறார். சிரார்த்தங் களுள் மகாசிரத்தையுடன் நடத்தவேண்டிய பெருஞ் சிராத்தம் இதுவாகின்றது. இனி, இச்சிராத்தக் கிரியைகளின் சிறப்பம்சங்களைத் தனித்தனியாக முறையே நோக்கி மேற்செல்வாம்.

## நக்னதானம்

இறந்தவருக்கு ஏற்படக்கூடிய ஆடையில்லாத குறையை நீக்குதற்பொருட்டுச் செய்யப்படுவது நக்னம். நிர்வாணநிலை. அதனுடன் அவருடைய பசிதாகத்துக்கும் இது சாத்தியமளிப் பதாகக் கொள்ளப்படும். உயர் தீட்சையாளர்க்கு இது பிரேததகனம் முடிந்த கையோடே செய்யப்படுவது.

## இடபதானம்

எருதுக்குச் சிறப்புச் செய்து அதனைப் பூசித்துத் தானஞ் செய்தல்; இறந்தவர் சார்பில் இருக்கக் கூடியதான தர்மபலன் களை, இன்னும் அவர் சார்பில் உளதாக வைக்காது, இடபத்தின் மூலம் சிவனிடத்தில் சேர்த்து விடுதல் இதன் நோக்கமாகும். இறந்தவர் தம்வாழ்விற் செய்தனவாகிய தானதர்மங்கள் ஒவ்வொன்றும் அவர், நான் எனது என்ற உணர்விற் செய்தனவாகலின் அவை மேலும் அவரோடே

ஒட்டிக்கிடந்து மேலும் மேலும் தம்பயனாகிய பிறப்புக் களைக் கொடுத்தல் கூடும். இது அவர் அடைய வேண்டிய சிவகதிப்பேற்றுக்குக் குந்தகமாம். இந்நிலையைத் தவிர்த் தற்கு ஒரே ஒருவழி அவற்றைச் சிவனிடத்திற் சேர்த்து விடுதல் தான். நான், எனது அற்றநிலையிற் செயல்களைச் செய்பவருக்கு இப்படியொரு தேவை ஏற்படாது. இந் நோக்கில், சாதாரண சிவபூசை, அடியார் பூசையிலுங்கூட அதனதன் பலனைச் சிவனிடத்திற் சேர்த்துவிடும் நிலை கிரியைமுகமாக உண்டு. இச்சைவஞான உண்மையின் அடிப்பாடாக இச்சிராத்தக்கிரியை அமைந்திருத்தல் குறிப்பிடத் தக்கதாம். இக்கிரியை சூத்திர நூல்களில் மிகவிரிவாகச் சொல்லப்படும். ஆனால், அங்கு இதன் விபரமும் விளக் கமும் வேறு. இச்சைவஞான விளக்கம் அங்கில்லை. அங்குள்ளபடியே இவற்றைக் கொள்வது வைதிகம். கிரியைகள் பெயரளவில் ஒன்றாயிருப்பினும் வைதிகத்துக்குஞ் சைவத்துக்குமிடையில் இத்தகைய வேறுபாடுகள் பெரும் பான்மையாகும்.

## ஏகோதிஷ்டம்

புரோகிதரிற் பிரேதசரீர சம்பந்தமான உயிரை ஆவா கனஞ் செய்து தானஞ் செய்யும் சிராத்தம் இதுவாகும். இதுபற்றி முன்னுங் கவனித்தோம். இதை ஏற்கும் புரோகிதரை, **'ஏகதட்டர்'** என்று சாதாரண வழக்கிற் கூறுவதுண்டு. சிலர் சிலரைச் சிலநேரத்தில் **'அவர் ஒரு ஏகதட்டர்'** என்று பரிகாசமாகக் கூறும் பொதுசன வழக்கம் இச்சிராத்தப் பயிற்சியால் ஏற்பட்டதேயாகும். இந்த ஏகோத்திஷ்டத்துக்கு விதிக்கப்பட்ட தானங்கள் இருபத்து நான்கு அவைவருமாறு:

| | | |
|---|---|---|
| பவித்திரம் | பாதுகை | யோகபட்டம் |
| பூணூல் | தண்டு | குடை |
| கமண்டலம் | கௌபீனம் | குல்லா |

| | | |
|---|---|---|
| ஜபமாலை | விபூதிப்பை | மேலங்கி(போர்வை) |
| வஸ்திரம் | நெய் | சமையல். உணவுப்பாத்திரங்கள் |
| மோதிரம் | வெண்ணெய் | தானிய வகைகள் |
| பொன் | பசு | சர்வாலங்காரதாசிகள் } அடிமை |
| இரத்தினம் | பூமி | தாசர்கள் } அடிமை |

## மாசிகங்கள்

மாசாமாசம் இறந்த திதியிற் செய்யப்படுஞ் சிராத்தம் மாசிகம் எனப்படும். இது முதல்வருடம் முழுவதும் நடைபெற வேண்டியது. மேற்குறிந்த ஏகோதிஷ்டத்தோடு, முதல் மாசிகம் முடிவுற்றதாகக் கருதப்படும். எனவே மாசத் திதிக்கணக்கில் எஞ்சியிருப்பது பதினொன்று. இவற்றுடன் இடைக்கால மாசிகங்களாக நான்கு சேர்த்து எல்லாமாக 15 மாசிகங்கள் கொள்ளப்படும்.

## இடைக்கால மாசிகங்கள் நான்கும் வருமாறு:

1. ஊனமாசிகம்: ஏகோதிஷ்டம் முடிந்து 27 ஆம் 30 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.
2. ஊனதிரிபட்ச மாசிகம்: அத்தொடர்பில் 40 ஆம் 45 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.
3. ஊனஆப்திக மாசிகம்: அவ்வாற்றால் 350 ஆம் 365 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.
4. ஊனஆப்திக மாசிகம்: அவ்வாற்றால் 350 ஆம் 365 ஆம் நாட்களுக்கிடையிற் செய்வது.

இந்த இடைக்கால மாசிகங்களுக்கு மட்டும் திதி நியமம் கொள்ளப்படுதலில்லை. செய்யும் தினம் ஒரு சுபதினமாயிருந்தாற் சரி. இம்மாசிகங்கள் பதினைந்தும், இறந்தவர்க்கு வாழ்க்கைச் சார்பிலிருக்கக்கூடிய பற்றுக்களை இயலுமளவு நீக்கிவைக்கும் நோக்கமாகச் செய்யப்படுவன.

இப்பதினைந்து மாசிகமும் நிறைவுற்றபின் சபீண்டீகரணம் என்பதோர் கிரியையுள்ளது. இதுவும் நிறைவுற்ற பின்பே குறித்த உயிர் சிவகதிக்காளாகும் என்பர். இந்நோக்கில் ஒருவர் இறந்துஒருவருடமுடிவிலேயே சபிண்டீகரணம் நிகழவேண்டியது. ஆனால், அவ்வளவுக்கு அதைச் செய்தற்குரிய கர்த்தா நிலைத்திருத்தல் பற்றியெழுஞ் சந்தேகத்தை முற்கொண்டு இச்சபிண்டீகரணத்தையும் ஏகோ திஷ்டம் முதலியன நடந்த அன்றே (எங்களுக்கு 31) செய்தல் வழக்கமாகிவிட்டது. அதற்காக, அதற்கு முன்னோடியாக நிகழ்தற்குரிய 15 மாசிகங்களையும் அவ்விடத்தில் ஒருங்கே செய்து விடுதலும் வழக்கமாயிற்று. முன்னெச்சரிக்கையாக அப்படிச் செய்தாலும், மேலும் கிரமந்தவறாமல் மாசாமாசம் மாசிகஞ் செய்தேவரல் வேண்டும் என்பது விதி.

## தருமாற்றங்கள் சில

ஏகோதிஷ்டம் என்றால் ஏக + உத்திஷ்டம்: ஏக - ஒன்று, உத்திஷ்டம் உத்தேசிக்கப்பட்டது. அதாவது ஒன்றையே உத்தேசித்துச் செய்யப்படுவது எனப் பொருள்படும் மற்றும் சிராத்தக் கிரியைகளில் விநாயகபூசை, சிவகும்பபூசை, பிதிர் ஆவாகன பூசை என்பவற்றுக்கும் இடமுண்டு. அது போலாகாது இங்கு இறந்ததாகிய உயிர் ஒன்றுக்கே நேரடியாக இது நிகழ்தலால் இது ஏகோதிஷ்டம் எனப்பட்டது என்பர். சூத்தி ரங்களிலும் சரி சைவ பத்ததிகளிலுஞ் சரி ஏகோதிஷ்டத்தைத் தொடர்ந்து மாசிகம் இடம்பெறுகின்றது. முதலாவது மாசிகம் ஏகோதிஷ்டக் கணக்கில் விடப்படுவதாக அங்குஞ் சொல்லப் பட்டிருக்கிறது. இந்நோக்கில் ஏகோதிஷ்த்துக்கும் மாசிகத் துக்கும் அந்தரங்கத் தொடர்பு இருக்க வேண்டுதல் இயல்பே அதற்கேற்றாற்போல்,

**'கிரியாக்ரம ஜோதிகை'** என்ற அகோரசிவாசாரிய பத்ததியில் ஏகோதிஷ்டஞ் சொல்லி முடிவில் **'இவ்வாறு செய்த பதினொராம் நாளிலும், மாசாமாசம் நாற்பத்தைந்தாம் நாளிலும் ஆறாம் மாசத்திலும் வருஷாந்தத்திலும் பதினைந்து ஏகோதிஷ்ட சிராத்தஞ் செய்க'** என்றும்,

திரு. சி. சுப்பிரமணியதேசிகர் எழுதிய **'சைவக்கிரியைகள்'** என்ற நூலில், மாசிகங்கள் பற்றிக் கூறும் பகுதியில், **'இவைகளும் இறந்தவரை மட்டுங் குறித்துச் செய்யப்படுவன வாதலால் ஏகோதிஷ்டாங்களேயாகும்'** என்றும் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

எங்கள் சார்பில் இன்று நடைமுறையில் உள்ளதை அவதானிக்கையில் ஏகோதிஷ்டக் கிரியைக்கும் மாசிகக் கிரியைக்குமிடையிற் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுண்டு. ஏகோதிஷ்டமென்றால், இறந்தவரின் பிரேதத்துவத் தொடர்பை நீக்குவது அவரது பிரேதத்துவத்தைப் புரோகிதரில் ஆவாஹித்துத் தூய்மைசெய்து கொள்வது என்ற விளக்கம் சூத்திர நூல்களில் உள்ளது. அருணாசலசாஸ்திரிகள் பதிப்பித்துள்ள ஆபஸ்தம்ப ஸ்மிருதியிலும் அவ்வாறேயுள்ளது. அதற்கியைந்தாற்போல், சைவபத்ததியாகிய கிரியாக்ரம ஜோதி கையிலும், **'ஏகோதிஷ்டமாவது தேவ காரியங்களில்லாமல் மரித்தவரைப் பரிசுத்தஞ் செய்வது'** என்ற வசனங் காணப் படுகின்றது. சுப்பிரமணியதேசிகர் அவர்கள், ஏகோதிஷ்ட விஷயத்தை அதிகதரஞ் சுருக்கமாகச் சொல்லி அக்கிரியையின் சுவரூபத்தைச் சொல்லாமலே விட்டிருக்கின்றார்.

சிலவேளைகளிற் சிலர் சிலரை **'ஏகதட்டர்'** என்று பரிகாசம் பண்ணும் தன்மையை அவதானிப்பதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டியது உளது. யார் தமக்கு எதைச் செய்தாலும், அதாவது தூஷணையோ, பூசனையோ எது பண்ணினாலும், எதிர்க்கும் ஆற்றலில்லாமல் ஏற்றுக் கொண்டிருப்பவரைத்தான் நம்மவர் **'ஏகதட்டர்'** என்று பரிகசிக்கிறார்கள். கிரியையில் சம்பந்தப்படும் **'ஏகோதிஷ்டர்'**க்கு நடப்பனவற்றிலும் இத்தன்மை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. அவர் தலையில் எண்ணெய் வைக்கிறார்கள் எலுமிச்சம்புளி வைக்கிறார்கள் அரப்புக்கூட வைக்கிறார்கள்.

முடிவில் அவரைப் போகவிட்டுச் சாணமும் தெளிக்கி றார்கள். அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். எங்கள் சூழலில் நிகழும் ஏகோதிஷ்டங்களில் இப்படி நிகழ்தல் காணப்படும். இந்த ஏகோதிஷ்டர் பண்பே, குறித்த பரிகாசபாத்திரமாகிய ஏகதட்டர் பண்புமாயிருத்தலினால் இந்த வழக்கம் சமுதாயத்தில் நெடுக இருந்துள்ளதென்பதற்கு ஐயமில்லை. ஸ்மிருதியில், இங்ஙனம் எண்ணெய், சிகைக்காய் முதலியன அவருக்கு வைக்கும் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. பிரேத தேகசுத்தி என்ற கருத்து நிலைக்கு இது பொருத்தமாயும் இருக்கிறது. ஆனால், சைவபத்ததியாகிய கிரியாக்கிரம ஜோதிகை யிலாவது, சைவக்கிரியைகள் என்ற நூலிலாவது ஏகோதிஷ்டருக்கு எண்ணெய் அரப்பு வைக்குஞ் செய்தி சொல்லப்படவேயில்லை. இனி ஏகோதிஷ்டந்தான் மாசிகமென்றால், மாசிகக் கிரியையிலும், இப்படி எண்ணெய் அரப்பு முதலாயின வைக்கும் வழக்கம் இருக்கவேண்டுமே! அன்றியும் மாசிகத்தில் பிண்டமிட்டுத் தர்ப்பணம் பண்ணும் நிகழ்ச்சியுண்டு. ஏகோதிஷ்டத்தில் அது இல்லை.

இந்நிலைமைகளை நோக்குகையில், எங்களுக்குரிய ஏகோதிஷ்டமும் மாசிகமும் சம்பந்தப்பட்ட வகையில் ஏதோ சில தடுமாற்றம் இருப்பதாகத் தெரிகிறது. இது மேல் விசாரணைக்குரியதொன்றாகும்.

## சோதகும்பசிராத்தம்

சோதகும்பம் - உதகத்தோடு கூடிய பாத்திரம்; அதாவது நீர்ப்பாத்திரம். இறந்த உயிருக்குரிய முக்கியகுறை தாகம் எனக்கொண்டு இறந்த அன்றே தகனம் முடிந்ததும் அவர் கிடந்த இடத்தில் தண்ணீர் வைக்கும் வழக்கம் இத்தானத்தின் முன்னோடி நிகழ்ச்சியாகும். வருடம் முழுவதுமே இத்தேவைப்பொருட்டு நீர் நிறைந்த பாத்திரம் தானஞ் செய்ய வேண்டுமென்பது கொள்கை. அது இயலாமைக்காகச் சபிண்டீகரணத்தின் முன் இத்தானஞ் செய்தல் பிரதானமாகக் கருதப்பட்டு வருகிறது.

## சபிண்டீகரணம்

இக்கிரியை சபிண்டி என்றாவது சவுண்டி என்றாவது சுருங்கிய பெயரால் நம்மவரிடை வழங்கும். பிண்டங்களின் மூலமாக இறந்தவரான உயிரைப் பிதிரர்களுடன் சேர்த்தல் சபிண்டீகரணம் எனப்படுகிறது. பிண்டம் என்பது மாவைக் குழைத்திடும் உருண்டை. இறந்த உயிரின் நலநோக்காளர் களாகிய பிதிரர்களைப் பற்றி ஏலவே கவனித்தோம். அவர்களைப் பிரீதிப்படுத்தும் நோக்கமாகவே முன்னைய கிரியைகள் பெரும்பாலும் நடைபெற்றன. இனி, அப்பிதிர் தேவர்களோடு உயிரைச் சேர்த்தல் இக்கிரியையினாற் கருதப்படுகிறது. அதன்மூலம், இறந்த உயிர் தன் பிரேதத்துவதோஷம் முற்றாக நீங்கிப் பிதிர்த்துவத்தை அடையினும் அடையும்; அல்லது தேவத்துவமடையினும டையும் தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தையுமடையும் என்பதே கொள்கை.

இக்கிரியையில் பிதிரர்களோடு தேவர்களும் ஆவாகனம் பெறுவர். எல்லாமாக 8 புரோகிதர்கள் இக்கிரியைக்குத் தேவைப்படுவர்.

| | |
|---|---|
| தேவர் பொருட்டு இருவர் | - நத்தி. மகாகாளர். |
| பிதிரர் பொருட்டு மூவர் | - ஸ்கந்தர். சண்டர். கணாதீசர் |
| அதிதி அப்யாகதர் இருவர் | - ஆரேனும் அப்போது அவ்விடம் வந்தவராக உள்ளோர். |
| நிமித்தர் ஒருவர் | - இறந்த உயிரின் பொருட்டு நியமிக்கப்படுவர். |

சபிண்டிக்கிரியையில் இவர்கள் எண்மரும் அமர்த்தப்படும் ஒழுங்கு கவர்ச்சிகரமானது. தேவர் இருவரும் மேற்குப்பக்கத்தில் கிழக்கு முகமாகவும், பிதிரர் தெற்கில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்கில் மேற்கு முகமாகவும், மற்ற இருவரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆக

வேண்டிய உபசாரங்கள், பூசைகள், தானங்கள் முடிந்தபின் சபிண்டீகரணம் இடம்பெறும்.

வாழையிலையில் மேற்கு ஓரமாக மூன்று பிண்டங்கள் தர்ப்பையின் மேல் தனித்தனி இடம்பெறும். கிழக்கில் தனியாக ஒரு பிண்டம் தர்ப்பையின் மேல் அமையும். இப்பிண்டம் சற்று நீளமானதாய் அந்தங்கள் சற்று வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டுவதாய் இருக்க வேண்டும். குறித்த மூன்று பிண்டங்களிலும் முறையே ஸ்கந்தர், சண்டர், கணாதீசர் என்ற பிதிரர் மூவரும் ஆவாகிக்கப்படுவர். கிழக்குப் பிண்டத்தில் இறந்த உயிரே ஆவாகிக்கப்படும். பிதிரர்களை ஆவாகிக்கும் போதும் பூசிக்கும் போதும் முறையே ஸ்கந்தரைக் குறித்து 'அஸ்மத் பித்ரே நம' என்றும், சண்டரைக் குறித்து 'அஸ்மத் பிதாமஹாய நம' என்றும், கணாதீசரைக் குறித்து 'அஸ்மத் ப்ரபிதாமஹாய நம' என்றும் மந்திரிக்கப்படும். பித்ரே - பிதாவுக்கு பிதாமஹாய - பேரனுக்கு, ப்ரதிதாமஹாய - பாட்டனுக்கு என்பது அர்த்தம். கிழக்கிலுள்ள நிமித்திகரைக் குறித்து 'ஓம் சிவகோத்ரஜாதாய, சிவபூதாய தீக்ஷ நாம யுக்தாய பித்ரே நம' சிவகோத்திரத்திற் பிறந்தவரும் இறந்து சிவமாந்தன்மையைச் சார இருப்பவரும் தீக்ஷாநாமமுள்ளவரு மாகிய பிதாவுக்கு வணக்கம் - என்று மந்திரித்தல் வேண்டும். இப்படியமைக்கப்பட்ட பிதிர்கள் மூவருக்கும் நிமித்தருக்கும் நைவேத்திய பூசை உபசாரங்களெல்லாம் கர்த்தாவாற் செய்யப்படும். கந்தத்துக்காக இவர்களுக்கு மஞ்சள் சாத்திப் பத்திரபுஷ்பங்களும் சாத்தப்படும். முடிவில், நிமித்தப் பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திரத்தையெடுத்துப் பிதிரர்கள் பிண்டத்திற் சேர்த்தல் மூலம் இந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் என்று பாவிக்கப்படுகின்றது. இது சைவசிராத்தத்திற் சபிண்டீகரண முறையாகும்.

நிமித்தப் பிண்டத்தை மூன்று பகுதியாக்கி, பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி சேர்க்கும் முறையும் ஒன்றுண்டு. அது வைதிகத்துக்கு; சைவத்துக்கன்று.

குறிந்த இவ்வொழுங்கே சமயதீட்சையாளர்களுக்கும், விசேட தீட்சையாளர் முதலியோர்க்கும் பின்பற்றப்படுவது. ஆனால் உயர்தீட்சையாளர்க்கு தேவர், பிதிரர், சார்பில் உள்ளார் பெயர்கள் மட்டும் வேறு. அவர்களுக்குத் தேவர் சார்பில் அநந்தர், உருத்திரர், என்போரும், பிதிரர் சார்பில் ஈசர், சதாசிவர், சாந்தர் என்போரும் இடம் பெறுவர்.

மேற்காட்டிய விபரத்தில் நாம் கவனித்த பிதா, பிதாமஹர், ப்ரபிதாமஹர் மூவரும் தந்தைமரபு குறித்தவர்கள் கிரியை செய்யும் ஒருவர் (கர்த்தா) தமது தந்தைக்காவது, அவரது சகோதரர்க்காவது சபிண்டி செய்கையில் இந்த முறையை அநுசரிக்கலாம். இனி, தாய் அல்லது அவரது சகோதரங்களைக் கருதிச் செய்கையிலும் இதுவே முறை. இங்கு இடம்பெறும் தேவர்களும் பிதிரர்களுமே அதற்குமுரியவர்கள். ஆனால் பிதா, பிதாமஹர், ப்ரபிதாமஹர் என்ற பெயர்களுக்குப் பதிலாக மாதா, மாதாமஹீ, ப்ரமாதாமஹீ என்பன இடம்பெறும். இப்படித் தாய்மரபு, தந்தைமரபு இரண்டுக்கும் பொருந்தாத சந்தர்ப்பத்தில் இந்தஒழுங்குமுறை பின்பற்றவராது. உதாரண மாக கணவன் மனைவிக்குச் சபிண்டி செய்கையிலும், ஒருவன் தன் சகோதரனுக்குச் செய்கையிலும், மேற்கூறியவாறு தாய்மரபில் மூவருக்கும் அல்லது தந்தைமரபில் மூவருக்குப் பதிலாக ஒருவரையே கருதி ஒரே பிண்டமேயிடவேண்டும் என்பர். இதற்கு ஏகோத்திட்ட விதானம் என்று தனியான பெயருண்டு.

இங்ஙனம், நிமித்தர் (இறந்த உயிர்) பிதிரர்களோடு ஒன்றாக்கப்பட்டு விட்டமையால் இனி மாசாமாசம் நிகழவிருக்கும் மாசிகங்களில் அவருக்குத் தனிப்பிண்டம் வேண்டியதில்லை. அவரையும் பிதிரர்களுடன் ஒன்றாகவே கொண்டு மூன்று பிண்டத்துடன் மாசிகக்கிரியை முடிக்கலாம்.

## ஆப்திக சிராத்தம்

முதலாவது வருஷ முடிவில் இறந்த திதியிற் செய்யப் படும் சிராத்தம்; இதில் மேற்காட்டியவாறு நிமித்தருக்குப் பிண்டமோ தானமோ வேண்டியதில்லை. இதுவே அபரக் கிரியைகளின் பூர்த்தியாகக் கருதப்படும்.

## வருட சிராத்தம்

சிராத்தக் கிரியைகளின் தொடர்பு இடையறாதிருக்கச் செய்வதற்காகவும், பிதிரர்களை இடையறாத திருப்திநிலையில் வைத்துக் கொள்வதற்காகவும், வசிக்குமிடங்களில் மந்திரக் கிரியை வாசனையை ஏற்படுத்துமுகமாகவும், வருடாவருடம் இறந்த திதியிற் செய்யப்படுவது வருட சிராத்தம் எனப்படும்.

## மஹாளயம்

வருடத்தில் புரட்டாதி மாசத்து அபரபக்கம் (அமாவாசைக்கு முன் 15 நாள்) பிதிரர்க்கு விசேட காலம் என்னும் கருத்துண்டு. அக்காலத்தில் அவர்களின் திருப்தி வேண்டிச் செய்யப்படும் சிராத்தம் மஹாளய சிராத்தம் எனப்படும் மற்றும் சிராத்தங்களில் ஏற்படும் குறைநிறை களுக்கு இது சாந்தியாக அமையும். மஹாளயம் - பேரொடுக்கம். ஆலயங்களில் அர்த்தயாம பூசை போல அபரக்கிரியையில் இது இடம்பெறும்.

## அமாவாசைத் தர்ப்பணம்

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளுந் தண்ணீரும் இறைத்தல்; தந்தை வர்க்கம், தாய் வர்க்கம் இரண்டிக்கும் இது நன்மை தருவதாகும்.

# அபரக் கிரியைகளும் நாங்களும்

சீவன் சீவத்தன்மைகள் கெட்டுச் சிவத்தன்மை அடையச் செய்தலே அபரக்கிரியைகளின் பண்பும் பயனும் என்பது மேற்கண்ட கிரியை விபரங்களாற் புலனாகின்றது. நாம் ஒவ்வொருவரும் இக்கிரியைகளுக்குத் தகுதியாகும் நிலையில் நம்மை வைத்துக்கொள்ள வேண்டுவதன் அவசியத்தை இக்கிரியைகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்குரிய அடிப்படைத் தகுதி சிவதீட்சையும், சந்தியாவந்தன அநுஷ்டான கிரமமும் இயலுமளவுக்குக் கூடுதலான சமயாசார சுத்தியுமாம்.

மண்மூடிக் கிடக்கும் இரும்பைக் காந்தம் வலிக்காது. செழும்பு மண்டிக் கிடக்கும் பாத்திரத்துக்கு மெருகு பூசினாற் பிடிக்காது. மேற்குறிப்பிட்ட சமயாசார சுத்தமில்லாத நிலையில் உயிருக்குச் செய்யும் அபரக்கிரியைகளும் அத்தன்மையனவே ஆகிவிடும்.

எவரெனினும் இறந்தவருக்கு அபரக்கிரியை செய்தேயாக வேண்டும் என்ற கொள்கை, சைவத்தில் நியதியாய் இருக்கிறது. அது சமய சம்பிரதாயமாக மட்டுமல்ல; இன்றியமையாத சமயக் கடமையுமாய் இருப்பதால் அதற்குரிய தகுதியை நாமே நாமாக நம்மில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது சொல்லாமலே அமையும், இறந்தவர்களாகிய நாம் நன்மையடைய வேண்டுமென்று கருதி இருப்பவர்கள் அருந்தி வருந்தி நமக்காகச் செய்யுங் கிரியைகள் வீண்போதல் கூடாதல்லவா!

இறந்தவர்களைக் கருதி இக்கிரியைகளைச் செய்வார்க்கும் அதற்குரிய தகுதிப்பாடு இன்றியமையாததே. அவரும் அதற்கேற்ற அடிப்படைத் தகுதியாகிய சிவதீட்சை, சந்தியாவந்தன அநுஷ்டானம், இயலுமளவு சமயாசாரசுத்தி என்பன உள்ளவராய் இருத்தல் வேண்டும்.

இக்கிரியைகளைச் செய்விக்கும் பொருட்டாக நம்மால் நியமிக்கப்படும் குருக்கள்மாரும், புரோகிதர்களும் கூட அதற்கேற்குமளவு ஆசாரசீலர்களாயிருக்கவேண்டியதும் அவசியமேயாம். சிவபூசை. அக்கினிகாரியம். வேதபாராயணம் என்ற அநுசரணைகள் உள்ள இக்கிரியைகளில் மிகுதியாக இடம் பெறுவது தானம். தானத்துக்கு வரையறவான ஒரு இலக்கணமுண்டு. உரிய தகுதிவாய்ந்த ஒருவரை வரவழைத்துச் செய்யுங் கொடையே தானமெனப்படும். ஏதும் தேவை கருதி வந்தவருக்குத் தகுதி நோக்காது கொடுப்பது தருமம் எனப்படும். அபரக்கிரியைகளின் போதுந் தருமத்துக்குப் போதிய இடமுண்டு. அது வேறு, இது வேறு இடபதானம், சோதகும்பதானம் முதலாகிய தானங்களைச் செய்யும்போது ஏற்பவருடைய தகுதியைக் கண்டிப்பாக அவதானித்தே செய்தல் வேண்டும். உரிய தகுதியுள்ளோர் கிடைக்காத பட்சத்தில் ஒரு தர்ப்பையை வைத்து, ஆசாரியலட்சணம் வாய்ந்த ஒரு நற்புரோகிதராக, அல்லது தாம் வழிபடும் ஒரு ஆலய மூர்த்தியாகப் பாவித்துத் தியானித்துத் தம்மியல்புக்கேற்ற முறையில் வழிபட்டுத் தானத் திரவியங்களை அதன்முன் படைத்து நேர்த்தி செய்து கொண்டு அத்திரவியங்களைக் கோயிலுக்கே கொடுத்துவிட வேண்டும் என்னும் விதியுமுண்டு. தானம் என்பதைத் தகுதியற்றவர் கையிற் கொடுத்தலே பாபம் என்பர். தகுதியற்றவனுக்குத் தானங் கொடுப்பவர் வனாந்தரங்களிலே மந்திகளாய்ப் பிறந்து அலைவார்கள் எனச் சீவகசிந்தாமணியில் ஒரு கருத்துண்டு. அக்கினிகாரியம் வேதபாராயண மாதியன இல்லார்க்குத் தானங்கொடுப்பவர் நரகத்துன்பத்துக்காளாவர் என்கிறது நாரத பக்தி சூத்திரம் தாம் வருந்தி முயன்று செய்யுந் தானம் தரவேண்டிய பலனைத் தராமை மட்டுமின்றித் தமக்கே தீங்கும் விளைப்ப தெனின், தானங் கொடுக்கப்படுவோரின் தகுதி விஷயத்தில் எவ்வளவு கவனஞ் செலுத்தப்படவேண்டுமென்பதை உணர்தல் நம்கடனாகின்றது.

கொடுக்கப்படும் பொருளளவு மிகச்சிறிதாயினும் அது தக்கவன் கையிற் கொடுக்கப்படுமானால் அது அளவிறந்த பயனைத் தரும் என்பது தமிழ்நீதி.

கைப்பொருள்

தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறி தாய்ப்போர்த்து விடும். - நாலடியார்.

இது இங்ஙனமாதல். பிரேதக் கிரியையைக் கொள்ளி வைத்தல் என்றும் அந்தியேஷ்டியைத் தர்ப்பை சுடுதல் என்றும் சிராத்தத்தை அரிசி கொடுத்தல் என்றும் அவற்றின் பெயர் வழக்கை இலகுபடுத்திக் கொள்வது போல, இக்கிரியைகளைச் சர்வ மானியமாகவோ சிரத்தைக் குறைவாகவோ நடத்துதல் விரும்பத்தகாததாகும்.

இனி, செத்தவரெல்லாஞ் சிவலோகஞ் சேர்வாரோ? இவைகள் யார் யாரோ ஏதேதோ சுயநல நோக்கமாக வகுத்த சம்பிரதாயங்கள் என்ற அபிப்பிராயமும், சம்பிரதாயத் துக்காக ஏதோ நடந்தாற்சரி என்ற திருப்தியும் ஒரோவோர் கோணங்களில் நிகழ்வதும் ஏதோ உண்மைதான். ஒரே மண்டபத்தில் ஒரேவேளையில் ஒன்பது பத்து அந்தியேஷ்டி ஒருமிக்க நடைபெறும் நிலைக்குரிய காரணங்களில் இதுவுமொன்றாயிருக்கின்றது. இவ்விளக்கம் துர்அதிஸ்ட வசமானது.

சிவலோக மடைவதற்கும் உரிய தகுதிப்பாடு ஒன்று உண்டென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், எல்லோருஞ் சிவலோகஞ் சேர்தலே மனித வாழ்விலட்சியமாம். அன்றியும், ஒவ்வொருவரும் தத்தம் தகுதிப்பிரகாரம் ஒவ்வோர் காலத்தில் சிவலோகம் அடைந்தே தீர்வர் என்பது சைவசித்தாந்த முடிபுமாம். சைவசமய அநுபவ நிலையில் பாவனைக்கு முக்கிய பலன் தராவிடினும் உரிய காலத்திற் பலன் தரும் என்பது சைவக்கொள்கையாகும். சிவோகம்

பாவனை செய்பவர் எடுத்த முதலெடுப்பிலேயே சிவமாய் விடுவார் என யாருங் கொள்வதில்லை. எனினும், உயிர் சிவமாதல் நியதமான ஒரு உண்மையாய் இருத்தலை முற்கொண்டு சிவோகம் பாவனை நடைபெறுவது போல்வதே இதுவுமாம்.

ஒரே உயிர் பலதடவை பிறந்து பிறந்து இறக்கலாம். இறக்கும் ஒவ்வொரு தடவையும் அது சிவலோகஞ் சேர்கிறது. சிவலோகஞ் சேர்கிறது என்று அதன் பொருட்டுத் தகுதியான மற்றொருவர் செய்யும் பாவனை ஒவ்வொன்றும் அது மந்திரக் கிரியா பாவனையாயிருத்தலினால் அந்த உயிரின் சிவத்தவப் பேற்றுக்கு உரியகாலத்தில் உதவுதல் தப்பாது. அந்த உயிர் தன் போக்கில் சிவத்துவத்துக்கான நெறியில் முயல்கின்ற குறிக்கப்பட்ட ஒரு கட்டத்தில், இப்பாவனைகள் அனைத்தும் அதன் பேற்றுக்கு அணை துணையாய் நின்றுதவும் என்பதே அபிப்பிராயமாகும்.

அன்றியும், இறந்த உயிர் தன் மறுபிறப்பிற் போய்க்கொண்டிருக்கும் போதிலும், அங்கு அதற்கு விளையவிருக்கும் சுகபோக நிலைகளுக்கு, இப்பாவனைப் பலன் பெருமளவிற் கைகொடுத்துதவும் என்ற நம்பிக்கையும் சைவ அனுபவத்தில் இடம் பெற்றிருத்தல் அறிதற்பாலதாம்.

உயிரோடிருப்பவர் பற்றிய கடமைகளிலும் பார்க்க இறந்தோர் பற்றிய கடமைகள் சைவத்தில் மிகப் பிரதானமாகக் கருதப்படுவதன் தாற்பரியம் இதுவாகும்.

## இறந்த உயிர் ஒன்று

1. சிவலோகமே சேர்ந்து விடுதல் முடிவான பயன்.
2. இடைப்படும் பிறப்புக்களில் சுகபோக நலங்கள் அதிகரிக்கப் பெறுதல் தற்காலிகபயன். இவ்விரண்டுக் கும் உரியது அபரக்கிரியை என்க.



தந்தை –தாய் பேண்



ஸம்பதி பங்கு- ஆகஸ்டு

# சமநிலையில் சஞ்சலமில்லை

இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப மனித வாழ்க்கையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படத்தான் செய்கின்றன.

பண்டைக் காலத்தில் பிறர் சொல்வதை ஏற்றுக்கொண்ட மனிதன் இப்பொழுது சுயமாகவே ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை மனதில் எழுப்பி விடைகாணத் துடிக்கிறான்.

சரியோ, பிழையோ மனதில் தோன்றும் எண்ணங்களுக்கு உருக்கொடுக்க விழைகிறான்.

இதனால் தான் செய்கின்ற செய்யப்போகின்ற, செயல்களின் பின்விளைவுகளை எண்ணிப்பார்க்கத் தவறி விடுகின்றான்.

பெரும்பாலும் இளைய தலைமுறையினரே இத்தகைய மனப்போக்கினைக் கொண்டவர்களாக வாழ்கின்றனர்.

இன்றைய நவநாகரிக உலகில் பெரும்பாலான இளைய தலைமுறையினரின் நடவடிக்கைகள் பெற்றோருக்கும், நாட்டிற்கும் பெரும் பிரச்சினைகளை உருவாக்கி விடுகின்றன.

இன்றைய உலகில் இளைய தலைமுறையினரில் பலர் எதனையும் அலசிப் பாராது எடுத்ததற்கெல்லாம் ஆத்திரப்பட்டு வேண்டாத பிரச்சினைகளைத் தாமாகவே தேடிக்கொள்வார்.

தோல்விகளையும், ஏமாற்றங்களையும் அணைத்துக் கொள்பவர்கள் தமக்கென்று இனிமேல் நல்லதொரு எதிர்காலம் இல்லை என்ற நினைப்பில் விரக்தியின் விளிம்புக்கே சென்று விடுகின்றனர்.

பொன்னானது சுடச்சுடத்தான் அதிலுள்ள மாசு நீங்கி ஒளி விடுகின்றது. இது போல் தான் நமக்கு ஏற்பட்டுள்ள தோல்விகளும், ஏமாற்றங்களும் நமது உள்ளத்திலுள்ள

தீயஎண்ணங்களை அகற்றி புனிதமடையச் செய்யும் என்று அவர்கள் எண்ணவேண்டும்.

உள்ளம் புனிதமடையும் பொழுது நிச்சயம் அவர்களது எதிர்காலம் சிறந்து விளங்கும் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் இன்பத்தையும், துன்பத்தையும் சமநிலையில் மதிக்கின்ற மனப்பான்மையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய மனநிலையை உருவாக்கிக் கொள்பவர்களுக்குச் சஞ்சலமில்லை.

எது, எப்போது நிகழ்ந்தாலும் அவற்றையெல்லாம் தாங்கிக்கொள்கின்ற மனஉறுதி இத்தகையோருக்கு ஏற்படும்.

எக்கருமத்தையும் பிறர்சொற்படி கேட்டு நடவாது தன் சொந்தப் புத்தியை அதாவது பகுத்தறிவைப் பயன்படுத்தி முயற்சிசெய்ய வேண்டும்.

பல இளைஞர், யுவதிகள், மற்றும் நடுத்தர வயதினர் இரத்த அழுத்தம், பாரிசவாதம். மனநோய், வயிற்றுப்புண் ஆகிய நோய்களினால் அவஸ்தைப்படுகின்றனர். இவற்றுக்கெல்லாம் அமைதியற்ற மனநிலையே முக்கிய காரணமாக இருக்கின்றன என உள, உடல் ஆய்வாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

எனவே நாம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமானால் மனதில் அமைதியை நிறைத்துக்கொள்ள வேண்டும்.

நன்றி.

– தினகரன்

# அன்று இன்று நடந்தது என்ன

**'அரிது அரிது மானிடராதல் அரிது'** என்பது ஔவையின் அருள் வாக்கு. மானிடனாகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்பதும் ஆன்றோர் வாக்கு. சகல பிறப்பும் பிறந்து ஓய்ந்து அறிவறிந்த மானிடப்பிறப்பை எடுத்தவர்கள் புண்ணியம் புரிந்தவர்கள். இப் பிறபுவனியில் போய் பிறவாமல் தமது காலத்தை அவமே போக்கின்றோம் என துன்பத்திற்கு ஆளாகின்றனர். இறையருள் பெற்று இறைவன் ஆட்கொள்ளும் பேற்றினை உடையோர் இப்பூமியில் உதிக்கும் மனிதர்களாம். மனிதர்களாகப் பிறவிஎடுத்த ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர் சூட்டப்படுவது எமது சமய மரபு ஆனால் எல்லோரும் சூடப்படும் பெயரோடு ஏற்றபடி வாழுவது இல்லை. இது நடைமுறைகளில் காணும் உண்மை.

ஆனால் ஒரு சிலருக்கு இறையருளினால் பொருத்தமாக அமைந்து விடுகிறது. அந்தவகையில் **அமரர் திருநாவுக்கரசு நேசமலர்** அவர்கள் புகழுடன் தோன்றி புகழோடு வாழ்ந்த அம்மையார். இது அவருக்கு இறைவன் கொடுத்த வரம். பெயருக்கு ஏற்றபடி தன்னுடைய நற்குண நற்செய்கை செயல்களில் காட்டிவிட்டார். அந்தணர்களிடையே பெருமதிப்புக் கொடுத்து பணிவோடு பழகுவதை யாராலும் மறக்க முடியாது. அவர் வழிபாடு செய்யும் அன்னை மீது பெரும் கருணை கொண்டவர். ஆலயங்களில் பணி செய்வதற்கு பின்னிற்கமாட்டார். தானும் ஒவ்வொரு ஆலயத்திலும் உபயகாரராக சேர்ந்து தனக்காக பிறருக்காக நன்மை கருதிவழிபாடு செய்த ஒரு இறைபணியாளர். அப்படிப்பட்ட அம்மையார் அவர்கள் தாரண வருடம் ஆவணிமாதம் வளர்பிறை மூல நட்சத்திரமும் தசமித்திதியும் சேர்ந்திருக்கும் நன்னாளில் இறைவனுடன் இரண்டறக் கலந்து விட்டார். அவரது குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி இறையருளை பிரார்த்தித்து இப்புனித ஆத்மா சாந்தியடைய யாவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சர்வேயனாகா சுகினோபவந்து
சமஸ்த சன் மங்களானி பவந்து
ஓம் சாந்தி சாந்தி சாந்தி .

சிவாகமக்கிரியாதத்துவநிதி
பிரதமகுரு ச.மு.ரவிக்குருக்கள்.
துறட்டிப்பனை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

# கண்ணீர் அஞ்சலி

## சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
## அமரர் திருநாவுக்கரசு நேசமலர்

உற்றதெல்லாம் நாமிழந்து
ஊரை விட்டு வருகையிலே
உறவைப் போல முகனமர்ந்து
உதவிகள் பல புரிந்தவரே!
உங்கள் நினைவுகள் எம் மனங்களில்
உறைந்திருக்கையிலே – இன்று
உதிர்ந்து விட்ட மாயம் தான் என்ன?
உதிர்ந்த மலரல்ல நீங்கள் – எம்
உள்ளங்களிலே உறைந்தவர்
கருணைக்கோர் இருப்பிடமே!
உமை காணாது தவிக்கும் எங்கள்
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறை தாழ் வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரினில் பங்கேற்பதுடன், எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

கல்வயல்,
சாவகச்சேரி.

குகன் மில்
குடும்பத்தினர்
(ஈசன்)

# கண்ணீர் காணிக்கை

## அமரர் திருமதி திருநாவுக்கரசு நேசமலர்


எமக்கு இனியவராய்
எல்லோர்க்கும் அன்புடையவராய்
பாசத்தின் இருப்பிடமாய்
பார்வையில் கனியவராய் இருந்து
மந்திரமாய் மறைந்தாயே
இதயம் தான் தாங்கிடுமோ
என்றும் இதயத்தில் ஒளி வீச
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

*சங்கரத்தை இந்து வாலிப சங்கத்தின் அங்கத்தவர்களான கஜேந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயார் அமரர்* **திருநாவுக்கரசு நேசமலர்** *அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டிக்கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*இந்து வாலிபர் சங்கம் சங்கரத்தை.*
*இந்து வாலிபர் சங்கம் கனடா கிளை*
*28. 08. 2004* *இந்து வாலிபர் சங்கம் அவுஸ்ரேலியா கிளை.*

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை விட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வம்
**அமரர் திருநாவுக்கரசு நேசமலரின்**
மரணச்செய்தி அறிந்து உடன்வந்த அயலவர்க்கும், உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கும், மற்றும் தந்தி, தொலைபேசி மூலம்
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலிகள்
வெளியிட்டோருக்கும், எங்கள் அம்மாவின் இறுதிக்கிரிகைகளைச்
சிறப்புற நடத்தியோருக்கும், எங்கள் துயரத்தில் கலந்துகொண்ட
அனைவருக்கும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் சிறப்புற நடந்தேற
உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்,
ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து சிறப்பித்தோருக்கும்,
இம்மலரை சிறப்புற அமைத்துத் தந்தோருக்கும்,
இம்மலரினை சிறப்புற அச்சிட்ட பாரதி பதிப்பகத்தினருக்கும்,
மற்றும் அனைவருக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை,*
*24. 09. 2004*

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*



"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு"

Designed & Printed by:
VISUAL GRAPIX PRINT. Colombo 13.TEL : 0777 728 206